Registered as a Newspaper

# உதயன்

பக்கங்கள் 12

விலை ரூ. 50

சுடர் : 38
கதிர் : 297

செவ்வாய்க்கிழமை 19 செப்ரெம்பர் 2023

புரட்டாதி 02 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2054

### மனித உரிமை துஷ்பிரயோகங்கள்

# உண்மை நல்லிணக்க ஆணைக்குழுவின் நோக்கங்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும்!

### மனித உரிமை கண்காணிப்பகம் காட்டம்

**கொழும்பு, செப்ரெம்பர் 19**

**இலங்கை அரசாங்கத்தின் மனித உரிமை துஷ்பிரயோகங்கள் தொடர்வது உத்தேச நல்லிணக்க உண்மை ஆணைக்குழுவின் நோக்கங்களுக்கு பாதிப்பை ஏற்படுத்துகின்றன - என சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.** »11

## ஜனாதிபதித் தேர்தலையும் பிற்போடுவதற்கு முயற்சி

### நிர்வாகம் சீர்குலையும் என்று எச்சரிக்கிறார் பீரிஸ்



கொழும்பு, செப். 19

ஜனாதிபதித் தேர்தலைப் பிற்போடுவதற்கு அரசு முற்படுமானால் நாட்டில் நிர்வாகக்கட்டமைப்பு முழுமையாகச் சீர்குலையும். சர்வதேச மட்டத்தில் எந்தவொரு சட்டபூர்வமான »11

செலான் வங்கியிடமிருந்து
உங்கள் தங்கப் பவுணிற்கு...
முற்பணம்
ரூ.120,000/=
வட்டிவீதம் மேலும் குறைக்கப்பட்டுள்ளது.
•அதிகபட்ச இரகசியத்தன்மை
•சிநேகபூர்வமான உடனடி சேவை
•சிறந்த பாதுகாப்பு
மேலதிக விபரங்களுக்கு அருகிலுள்ள செலான் வங்கியை நாடுங்கள்
011 200 88 88
செலான் வங்கி

## 12 மாதங்களில் 36 பகிடிவதைகள்

விரிவு- பக்.11

### ஊர்தி மீது தாக்குதல்

## 6 பேர் மறியலில்

திருகோணமலை, செப். 19

திருகோணமலை, சர்தாபுர பகுதியில் தியாக தீபம் திலீபனின் உருவச்சிலை தாங்கிய ஊர்தி மீது தாக்குதல் நடத்தியதுடன், நாடாளுமன்ற உறுப்பினர் உட்பட 14 பேரைத் தாக்கி காயப்படுத்திய குற்றச்சாட்டின்பேரில் கைது செய்யப்பட்ட 2 பெண்கள் உள்ளிட்ட 6 பேரும் நாளைமறுதினம் 21ஆம் திகதி வரை »11

### தியாக தீபம் திலீபனின் -

## ஊர்திக்குத் தடை கோரிய பொலிஸ்; பாதுகாக்குமாறு பணித்த நீதிமன்றம்

வவுனியா, செப். 19

தியாக தீபம் திலீபனின் திருவுருவப்படம் தாங்கிய ஊர்தி வவுனியாவில் பயணிப்பதற்கு பொலிஸார் தடை கோரி வவுனியா நீதிமன்றில் மனுத் தாக்கல் செய்தபோதும், நீதிமன்றம் அதனை நிராகரித்து, குழப்பங்கள் ஏற்படாத வகையில் பொலிஸ் பாதுகாப்பை வழங்குமாறு நேற்று உத்தரவு பிறத்துள்ளது.

தியாக தீபம் திலீபனின் 36ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு ''திலீபன் வழியில் வருகின்றோம்'' என்னும் திலீபனின் திருவுருவப் »11

### புதுக்குடியிருப்பில்

## ஒருவரைக் காணோம்

முல்லைத்தீவு, செப். 19

புதுக்குடியிருப்பைச் சேர்ந்த குடும்பத் தலைவர் ஒருவர் கடந்த 10ஆம் திகதி தொடக்கம் காணாமற்போயுள்ளார் என்று பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. »11

## ஆஸிக்கு அனுப்புவதாக ரூ. 75 இலட்சம் மோசடி

### பாதிக்கப்பட்ட ஆசிரியர் முறைப்பாடு

யாழ்ப்பாணம், செப். 19

அவுஸ்திரேலியாவுக்கு அனுப்புவதாகத் தெரிவித்து 75 இலட்சம் ரூபா பணத்தைப் பெற்றுக் கொண்டு ஏமாற்றியமை தொடர்பில் »11

### இடைநடுவில் கைவிடப்பட்டுள்ள

## வீதிக் கட்டமைப்புப் பணிகளை விரைவாக ஆரம்பிக்கத் திட்டம்

கொழும்பு, செப். 19

இடைநடுவில் கைவிடப்பட்டுள்ள நாட்டின் வீதிக் கட்டமைப்பின் நிர்மாணப் பணிகளை மீள ஆரம்பிக்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாக நெடுஞ்சாலைகள் இராஜாங்க அமைச்சர் சிறிபால கம்லத் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் வரவு - செலவுத் திட்டத்தில் அதற்குத் தேவையான நிதி ஒதுக்கீடுகள் ஒதுக்கப்பட்டு, அந்த வீதிகளின் நிர்மாணப் பணிகள் துரிதமாகப் பூர்த்தி செய்யப்பட்டு மக்களிடம் »11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை நேர அட்டவணை ஒழுங்கின்மையால் பாதிப்பு!

## அரச ஆசிரியர் சங்கம் சுட்டிக்காட்டு

**கொழும்பு, செப்.19**

**தற்போது காணப்படும் பாடசாலை நேர அட்டவணையை இதுவரையிலும் வழமைக்கு கொண்டு வர முடியவில்லை. அதனால் மாணவர்கள் பாதிப்புகளை எதிர்கொள்ள நேரிடும் என்று இலங்கை அரச ஆசிரியர் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.**

கண்டியில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த அந்தச் சங்கத்தின் செயலாளர் செஹான் திஸாநாயக்க தெரிவித்துள்ளதாவது:-

பாடசாலை மாணவர்களுக்கு உரிய நேரத்தில் பரீட்சைகள் நடத்தப்பட வேண்டும். இந்த வருடத்துக்கான பாடத்திட்டம் அடுத்த வருடம்வரை கொண்டு செல்லப்படுகிறது. இதனால் பாடசாலைப் பரீட்சைகள் தாமதமாக நடத்தப்படுகின்றன.

முதல் முறை பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் இரண்டாவது முறையாகவும் பரீட்சைக்குத் தோற்றுவார்களாயின் அவர்களுக்கு சிறிய இடைவேளை ஒன்று வழங்கப்பட வேண்டும். பரீட்சைத் திணைக்களம் உரிய முறையில் பரீட்சைகளைத் திட்டமிட்டு நடத்த வேண்டும் - என்றார். (எ-இ)

# போலிப் போதை மாதிரிகளை ஆய்வுக்கு அனுப்பும் பொலிஸ்

## நாடாளுமன்றத் துறைசார் கண்காணிப்புக் குழு தகவல்

கொழும்பு, செப்.19

சில பொலிஸ் உத்தியோகத்தர்கள் வேண்டுமென்றே எதிர்மறையான பெறுபேறுகளை வழங்கும் போதைப்பொருள் மாதிரிகளை அரசாங்க இரசாயனப் பகுப்பாய்வாளர் திணைக்களத்துக்கு சமர்ப்பிக்கின்றனர் என்று நாடாளுமன்றத் துறைசார் கண்காணிப்புக் குழு வெளிப்படுத்தியுள்ளது.

கடந்த ஆண்டில் மட்டும் குறைந்தபட்சம் ஆயிரத்து 580 தவறான மாதிரிகள் சமர்ப்பிக்கப்பட்டமை கண்டறியப்பட்டுள்ளது என்று நீதி மற்றும் சட்டம் மீதான துறைசார் மேற்பார்வைக் குழு தெரிவித்துள்ளது.

மருதானை, பேலியகொடை, கடுவலை, பொரளை ஆகிய பொலிஸ் நிலையங்களால் இவ்வாறு அதிகளவு போலியான மாதிரிகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன என்றும் தெரியவந்துள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் டபிள்யூ.டி.ஜே.செனவிரத்ன தலைமையில் இந்தத் துறைசார் கண்காணிப்புக் குழு கூடியபோது, குறித்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

# அத்தியாவசிய சேவைகளாக சில துறைகள் அறிவிப்பு

## வெளியிடப்பட்டது வர்த்தமானி




கொழும்பு, செப்.19

நாட்டின் சில துறைகள் அத்தியாவசிய சேவைகளாகப் பிரகடனப்படுத்தப்பட்டு அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

மின்சார விநியோகம் மற்றும் அதனுடன் தொடர்புடைய அனைத்துச் சேவைகள், எரிபொருள் மற்றும் எரிபொருள் விநியோகம், சுகாதார சேவைகள் என்பன அத்தியாவசிய சேவைகளாகப் பிரகடனப்படுத்தப்பட்டு வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பணிப்புரைக்கு அமைய நேற்றுமுன்தினம் இந்த அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

1979 ஆம் ஆண்டின் 61 ஆம் இலக்க அத்தியாவசிய பொதுச் சேவைகள் சட்டத்தின் பிரிவு - 2 இன் கீழ் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு இணங்க இந்த அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது. பொது மக்களின் இயல்பு வாழ்க்கையினை பேணுவதற்கு அத்தியாவசிய சேவைகளில் தடை அல்லது இடையூறு ஏற்படுவதனைத் தவிர்க்கும் வகையில் இந்த வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

மருத்துவர்கள், முதியோர் இல்லங்கள், மருந்தகங்கள் மற்றும் ஏனைய பொது நிறுவனங்களில் நோயாளர்கள் பராமரிப்பு, உணவளித்தல், சிகிச்சை வழங்குதல் தொடர்பான அனைத்தும் அத்தியாவசிய சேவையாக அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

# ஹரக் கட்டாவின் தாய் கைது!



கொழும்பு, செப்.19

திட்டமிட்ட குற்றக்கும்பல் உறுப்பினர் நதுன் சிந்தக விக்ரமரத்ன எனப்படும் ஹரக் கட்டாவை தடுப்புக் காவலிலிருந்து தப்பிக்க வைக்க முயற்சி செய்து தற்போது தலைமறைவாகியுள்ள பொலிஸ் கொன்ஸ்டபிளின் தாய் மற்றும் அவரது மைத்துனர் ஆகியோர் விசேட பொலிஸ் குழுவால் கைது செய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்ட பெண் திடீர் சுகவீனம் காரணமாக கொழும்பு தேசிய மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார் என்று கூறப்படுகின்றது.

ஹரக் கட்டாவுக்கு நேரடியாக உதவியதாகக் கூறப்படும் மற்றுமொரு பொலிஸ் கொன்ஸ்டபிள் விரைவில் கைது செய்யப்படவுள்ளார் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

இரண்டு கொன்ஸ்டபிள்களைத் தவிர, குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் உயர் அதிகாரிகள் மற்றும் அரசியல் பிரமுகர்கள் ஆகியோரும் ஹரக் கட்டாவின் தப்பிக்கும் சதித் திட்டத்தின் திரைக்குப் பின்னால் உள்ளனர் என்று பொலிஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

கொன்ஸ்டபிள்களில் ஒருவர் வெளிநாட்டுக்குத் தப்பிச் சென்று விட்டார் என்று காட்ட முயற்சித்த போதிலும், அவர் இன்னும் நாட்டிலேயே உள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (எ-இ)

# சமூக வலைத்தளங்களில் அவதூறு பரப்புவோர் மீது கடும் நடவடிக்கை

## புதிய சட்டங்கள் தயாரிக்க நடவடிக்கை


கொழும்பு, செப்.19

நிர்வாண ஒளிப்படங்கள் மற்றும் காணொலிகளை சமூக வலைத்தளங்களில் பரப்புவோருக்கு கடுமையான தண்டனை வழங்கக்கூடிய வகையில் எதிர்காலத்தில் சட்டங்கள் தயாரிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான சட்டங்கள் அடங்கிய சட்டமூலம் தொடர்பான அமைச்சரவைப் பத்திரம் பொது பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்றும் தெரியவந்துள்ளது.

காதல் தொடர்புகளின்போது எடுக்கப்பட்ட தனிப்பட்ட மற்றும் நிர்வாண புகைப்படங்கள் மற்றும் காணொலிகளைச் சமூக ஊடகங்கள் மூலம் பரப்புவதைத் தடுக்கும் நோக்கத்தில் இந்த புதிய விதிகள் தயாரிக்கப்பட்டுள்ளன என்று கூறப்படுகிறது. (எ-இ)

# கடந்த 9 மாதங்களில் 75 சூட்டுச் சம்பவங்கள்



கொழும்பு, செப்.19

நாட்டில் கடந்துள்ள 9 மாதங்களில் மாத்திரம் 75 துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன என்று பொலிஸ் ஊடகப்பேச்சாளர் தெரிவித்தார்.

இந்தத் துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்களில் 42 பேர் பலியாகியுள்ளனர். 33 பேர் காயமடைந்துள்ளனர் எனவும் அவர் கூறினார்.

அதேவேளை, நாட்டில் கடந்த சில நாள்களாக துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்கள் அதிகரித்துள்ளன. நேற்றுமுன்தினம் நடந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் சிறுமி ஒருவர் உயிரிழந்திருந்தார். (எ-44)

# மேலதிக வகுப்பு நடத்திய ஆசிரியர்களுக்கு மாற்றல்

கொழும்பு, செப்.19

சுற்றறிக்கையை மீறி மேலதிக வகுப்புகளை நடத்திய 10 ஆசிரியர்களை மத்திய மாகாணக் கல்வி அமைச்சு இடமாற்றியுள்ளது.

பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு தனியார் வகுப்புகளை நடத்த வேண்டாம் என மத்திய மாகாண கல்வி அமைச்சு வெளியிட்டிருந்த சுற்றறிக்கையை மீறி மேலதிக வகுப்புகளை நடத்தியவர்களே இடமாற்றப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.


பாடசாலை மட்டத்தில் வினாத்தாள்களைத் தயாரித்து நடத்தப்படும் தவணைப் பரீட்சைகளில் தனியார் வகுப்புகளை நடத்தும் ஆசிரியர்கள் தங்களிடம் மேலதிக வகுப்புகளுக்கு வரும் பிள்ளைகளுக்கு அதிக புள்ளிகளை வழங்குகின்றனர் என்றும், பாடசாலை வகுப்புகளில் அவர்களுக்கு சார்பாக நடந்து கொள்கின்றனர் என்றும் மாகாணக் கல்வி அமைச்சுக்கு முறைப்பாடு கிடைத்திருந்தது. இதனையடுத்து, மேலதிக வகுப்புகள் நடத்துவதற்குத் தடை விதிக்கப்பட்டிருந்தது. தற்போது மத்திய மாகாணக் கல்வித் திணைக்களத்தால் பாடசாலை மட்டத்தில் தயாரிக்கப்படும் தவணைப் பரீட்சை வினாத்தாள்களை அடுத்த வருடம் முதல் மத்திய மாகாணக் கல்வித் திணைக்களத்தால் தயாரிக்கவும் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், கண்டி மற்றும் அதனை அண்மித்த பகுதிகளில் உள்ள பல பாடசாலைகளின் ஆசிரியர்கள் சிலர் சுற்றறிக்கைக்கு எதிராக மேலதிக வகுப்புகளை நடத்துகின்றனர் என்று கிடைத்த தகவலையடுத்து மாகாணக் கல்விச் செயலாளர் மேனகா ஹேரத்தின் பணிப்புரையின் பேரில் விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

அதில் இனங்காணப்பட்ட ஆசிரியர்களுக்கு இடமாற்றல் வழங்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய மாற்றத்தை உருவாக்க மக்கள் ஒற்றுமை அவசியம்!



## அநுரகுமார திஸாநாயக்க தெரிவிப்பு

கொழும்பு, செப்.19

**நாட்டு மக்களைப் பிரித்து, வேறுபடுத்தி விட்டு அரசியல்வாதிகள் அனைவரும் ஒன்றிணைந்துள்ளனர். எமக்குள் கலாசார வேறுபாடுகளே காணப்படுகின்றனவே தவிர அரசியல் வேறுபாடுகள் இருப்பதில்லை. இனிமேலும் நாம் பிளவுபட்டு பிரிந்து இருப்பதில் எந்தப் பயனும் கிடையாது. புதிய மாற்றம் ஒன்றை உருவாக்க நாட்டு மக்கள் அனைவரும் ஓரணியாக ஒன்றிணையவேண்டும்.**

- இவ்வாறு தேசிய மக்கள் சக்தியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

நாட்டின் சுகாதாரக் கட்டமைப்பு வீழ்ச்சியடைந்துள்ளது. மருத்துவர்கள் நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர். மருத்துவமனைகளில் பரிசோதனைகள் நிறுத்தப்பட்டுள்ளன. நோயாளர்களுக்கு தரமற்ற மருந்துகள் வழங்கப்படுகின்றன. கண்களுக்கு மருந்து எடுக்க வரும் நோயாளி கண்பார்வையற்றே வீட்டுக்குச் செல்கிறார்கள். தடுப்பூசி ஏற்றப்படும் நோயாளர் மரணிக்கிறார். இவற்றை மாற்றவேண்டும். இந்தப்பிரச்சினைகள் இன்று மட்டுமல்ல. இதற்கு முன்னரும் அவ்வாறே இருந்தது.

எமது பிள்ளைகளுக்கு முறையான கல்வி இல்லை. கல்வி கற்பதற்கான வசதிகள் இல்லை. படித்தால் வேலைவாய்ப்பு இல்லை. நாட்டில் உள்ள இளைஞர்கள் நாட்டை விட்டு வெளியேறுகிறார்கள். நாட்டில் பல பிரச்சினைகள் காணப்படுகின்றன. எமது நாடு உலக நாடுகளிடமிருந்து கடன்களைப் பெற்றுப் பிச்சைக்கார நாடாக மாறியுள்ளது. இவற்றை மாற்றவேண்டும் அல்லவா? பெற்றுக்கொண்ட கடனை மீளச் செலுத்த முடியாத வங்குரோத்து நாடாக உலக நாடுகளால் அடையாளப்படுத்தப்பட்டது. இந்த நிலைமைக்கு நாட்டைக் கொண்டு வந்தவர்களை விரட்ட வேண்டும். நாட்டின் சொத்துகளைக் கொள்ளையிட்டவர்களை விரட்டவேண்டும். திருடர்களை ஆட்சி அதிகாரங்களிலிருந்து துரத்தவேண்டும்.

நாம் ஒன்றுபடவேண்டும். கடந்த 75 வருடங்களாக நாட்டு மக்களைப் பிரித்து ஆட்சி செய்கிறார்கள். நாட்டில் புதிய மாற்றம் ஒன்றை உருவாக்க நாட்டு மக்கள் அனைவரும் ஓரணியில் இணையவேண்டும். அதற்குத் தலைமை வழங்க தேசிய மக்கள் தயாராக உள்ளது - என்றார். (எ-இ)



# சுப்பர் ஸ்டார் பாடலை கைதட்டி ரசித்த அநுர!

கொழும்பு, செப்.19

தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க பங்கேற்ற கூட்டத்தில் 'சுப்பர் ஸ்டார்' ரஜினிகாந்தின் பாடல் இசைக்கப்பட கைதட்டியவாறு அதைக் கேட்டு மகிழ்ந்தார் அநுர.

தேசிய மக்கள் சக்தியின் திருகோணமலை, மூதூர் தொகுதி மாநாடு தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தலைமையில் நடைபெற்றது.

அதில் 'அண்ணாமலை' திரைப்படத்தில் வரும் 'வந்தேன்டா பால்காரன்' எனத் தொடங்கும் பாடல், அநுரவின் தூய்மையான அரசியல் பயணத்தைக் குறிக்கும் வகையில் வரிகள் மாற்றப்பட்டு பாடப்பட்டது.

"வந்தாரே அநுரகுமார, அடடா....அவர் நோக்கம் பத்தி பாடப்போறேன்....

ஜாதிபேதம் ஏதும் இல்லா சேவைதனை செய்திடுவார் பாரு....

அட ஊழல் இல்லா அரசியலை துணிவோடு செய்திடுவார் பாரு..." என்றவாறு வரிகள் மாற்றப்பட்டிருந்தன.

பாடலைக் கேட்ட கூட்டத்தில் பங்கேற்றிருந்தவர்கள் கைதட்டி ஆரவாரம் செய்தனர். அநுரவும் மேடையில் அமர்ந்திருந்து கைதட்டியவாறு பாடலைக் கேட்டு மகிழ்ந்தார். (எ-40)

# நாடு திவாலானமை திட்டமிடப்பட்ட சதி!

## இப்படிக் கூறுகிறார் கப்ரால்

கொழும்பு, செப்.19

திவாலான நாடாக அறிவிக்கப்பட்டமை பல மாதங்களாக முன்னெடுக்கப்பட்ட சதி என இலங்கை மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அஜித் நிவார்ட் கப்ரால் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் பொருளாதார திவால் தன்மைக்கான காரணங்களைக் கண்டறிய நியமிக்கப்பட்ட நாடாளுமன்றத் தெரிவுக்குழுக் கூட்டத்தில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் செயலாளர் நாயகம் சட்டத்தரணி சாகர காரியவசம் தலைமையிலான நாடாளுமன்றத் தெரிவுக்குழு முன்னிலையில் இலங்கை மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அஜித் நிவார்ட் கப்ரால் மற்றும் தற்போதைய ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்த்தன ஆகியோர் அழைக்கப்பட்டிருந்தனர். அங்கு அவர்கள் வாக்குமூலங்களை வழங்கியிருந்தனர்.

அங்கு கருத்துத் தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்த்தன, இது தொடர்பில் புலனாய்வுப் பிரிவினரால் விசாரணை நடத்தப்படவேண்டும் என்று கூறியிருந்தார். (எ-இ)




ஒரு சின்னப்பிள்ளையின்ர கை பறிபோன சம்பவத்துக்குப் பிறகு யாழ்ப்பாணத்து ஆஸ்பத்திரியளில கனக்க மாற்றம் தெரியுது. முந்தியெல்லாம் ஒரு வருத்தக்காரர் ஆஸ்பத்திரிக்குப் போனா அவையை 'வேண்டா மருமகள்' மாதிரிப் பாக்கிற நேர்ஸ்மாரும், அட்டெண்டர்மாரும் இப்ப ஏதோ வெளிநாட்டுக்காரர் வீட்ட வந்தமாதிரி அடிச்சுப் பிடிச்சு எல்லாப் பணிவிடையும் செய்யினமாம்.

இப்பிடி அவை தங்கட வேலையளைச் சரியாச் செய்தால், சனம் ஏன் அவையைக் குறை சொல்லப்போகுது? அதைவிட வருத்தக்காரரை அரசாங்க ஆஸ்பத்திரியள் அக்கறையாக் கவனிச்சால் பிரைவேட் ஹொஸ்பிட்டலுக்கும் சனங்கள் போறதைக் குறைச்சுப் போடுங்கள்.

பிரைவேட் ஹொஸ்பிட்டல் எண்டத்தான் ஒரு விசயம் நினைவுக்கு வருகுது. இப்ப நேர்ஸ்மார், அட்டெண்டர்மார் எல்லாரும் தங்கட டியூட்டியைச் சரியாச் செய்யத் தொடங்கியிருக்கேக்கையும், சில டொக்டர்மார் பழைய விளையாட்டுத்தான் காட்டுகினம்.

பிரைவேட் ஹொஸ்பிட்டல்களில உழைச்சு ருசி கண்ட சில டொக்டர்மாருக்கு அரசாங்க ஆஸ்பத்திரியில நிக்கேக்கையும் பிரைவேட் ஹொஸ்பிட்டல் வேலையிலைதான் மனம் நிக்குதாம். ஆஸ்பத்திரியில அவை டியூட்டியில இருக்கேக்கையே, பிரைவேட் கிளினிக்கில இருக்கிறவை எக்ஸ்ரேயில இருந்து எல்லாப் பரிசோதனையளின்ர ரிப்போர்ட்டையும் ஸ்மார்ட் போனுக்கு அனுப்புவினம். இஞ்ச ஆஸ்பத்திரியில டொக்டர் என்ன வேலை செய்தாலும் அதை அப்பிடியே விட்டிட்டு, ஸ்மார்ட் போனில வந்த ரிப்போர்ட்டை கிளியர் பண்ணிட்டுத்தான் மற்றவேலையாம்,

அதைவிட இப்ப டொக்டர்மார் டியூட்டி நேரத்தில, அதாவது பின்னேரம் நாலரை மட்டும் பிரைவேட் ஹொஸ்பிட்டலுக்கு போகக்கூடாது எண்டு ரூல்ஸ் இருக்கு. சிலர் அந்த ரூல்ஸுக்கும் தண்ணி காட்டிப் போட்டுப் போகினம். ரூல்ஸ்படி நடக்கிற டொக்டர்மார் குறிப்பா சேர்ஜன்மார் இரவிலையிருந்து விடிய விடிய பிரைவேட் ஹொஸ்பிட்டல்களில ஒப்பிரேசன் செய்யினமாம். பிறகு விடிய அப்பிடியே அரசாங்க ஆஸ்பத்திரியளுக்கு வருகினம்.

என்னதான் டொக்டராயிருந்தாலும், அவையும் மனிசர்தானே. இப்பிடி நித்திரை கொள்ளாமல் இரவுபகலா அவை வேலைசெய்தால், அவையின்ர மனநிலையும், உடல்நிலையும் எங்கேயோ ஒரு இடத்தில பிழைவிடத்தான் செய்யும். சனங்களின்ர உயிரைக் காப்பாத்துற கடவுளின்ர இடத்தில இருக்கிற டொக்டர்மார் பிழைவிட்டால் அது வருத்தக்காரரைத் தானே பாதிக்கும். டொக்டர்மார் அரசாங்க ஆஸ்பத்திரி, பிரைவேட் ஹொஸ்பிட்டல் எண்டு எங்க வேலை செய்தாலும், குறிப்பிட்ட மணித்தியாலம் தான் வேலை செய்யலாம் எண்ட சட்டம் கொண்டந்தாத்தான் இந்த நிலைமையையும் மாத்தலாம் போல.



- பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# லிபிய வெள்ளப்பெருக்கில் 4 ஆயிரம் பேர் உயிரிழப்பு

## ஐ.நா. சபை தெரிவிப்பு

நியூயோர்க், செப்.19
லிபியாவில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கால் 3 ஆயிரத்து 958 பேர் உயிரிழந்துள்ளனர் என்று ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.
வடக்கு ஆபிரிக்க நாடான லிபியாவைக் கடந்த வாரம் புயல் தாக்கியிருந்த நிலையில், அங்கு கடும் மழை பெய்தது.
அங்குள்ள இரு பழமையான அணைக்கட்டுகள் உடைந்ததால் வெள்ளம் நகரங்களுக்குள் புகுந்தது.
இந்த வெள்ளப்பெருக்கில் 10 ஆயிரத்துக்கும் அதிக மானவர்கள் உயிரிழந்துள்ளனர் என்று முன்னதாகத் தகவல்கள் வெளியாகியிருந்தன.
தற்போது ஐ.நா. திருத்திய உயிரிழப்பு எண்ணிக்கையை வெளியிட்டுள்ளது.
ஐ.நா.வுக்கான மனிதாபிமான விவகார ஒருங்கிணைப்பு அதிகாரி, 3 ஆயிரத்து 958 பேர் உயிரிழந்துள்ளனர் என்று தற்போதுவரை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளார். (ஏ-இ)

# விஸாக் கட்டணத்தை உயர்த்திய பிரிட்டன்

லண்டன், செப்.19
சுற்றுலா மற்றும் மாணவர்களுக்கான நுழைவிசைவுக் கட்டணங்களை அதிகரித்துள்ளது பிரிட்டன்.
நுழைவிசைவுக் கட்டணங்களின் மாற்றம் தொடர்பான சட்டம் பிரிட்டன் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.
ஆறு மாதங்களுக்குக் குறைவான காலம் தங்குவதற்கான சுற்றுலா நுழைவிசைவுக்கான கட்டணம் 15 பவுண்ஸால் அதிகரிக்கப்பட்டுள்ளது.
மாணவர் நுழைவிசைவுக்கான கட்டணம் 127 பவுண்ஸால் அதிகரிக்கப்பட்டுள்ளது. பிரிட்டனுக்கு வெளியே உள்ள மாணவர் ஒருவர் நுழைவிசைவுக்கு விண்ணப்பிப்பதற்கான கட்டணம் இனி 490 பவுண்ஸ் ஆகக் காணப்படும் என்று கூறப்படுகின்றது. (ஏ-இ)

# ரஷ்யப்பயணம் முடித்து நாடு திரும்பினார் கிம்

பியாங்யாங், செப்.19
ரஷ்யாவுக்குப் பயணம் மேற்கொண்ட வடகொரிய ஜனாதிபதி கிம் ஜோன் உன் நாடு திரும்பியுள்ளார்.
சிறப்பு ரயில் மூலம் ரஷ்யாவுக்குச் சென்ற கிம், அங்கு ரஷ்ய ஜனாதிபதி புடினைச் சந்தித்துக் கலந்துரையாடியிருந்தார்.
ரஷ்யாவுக்கும் உக்ரைனுக்கும் இடையிலான போர் உக்கிரம் பெற்றிருக்கும் நிலையில், இந்தச் சந்திப்பு சர்வதேச அளவில் கவனிப்பைப் பெற்றிருந்தது.
இந்தச் சந்திப்பில் இருவரும் ஆயுதப் பரிமாற்ற ஒப்பந்தம், இராணுவத்துக்கு இடையிலான மூலோபாய மற்றும் தந்திரோபாய ஒருங்கிணைப்புப் போன்றவை தொடர்பில் கலந்துரையாடினர் என்று கூறப்படுகின்றது.
தனது 6 நாள் பயணத்தை முடித்துக் கொண்டு தற்போது கிம், வடகொரியா திரும்பியுள்ளார். (ஏ-இ)

# ஐக்கிய நாடுகள் பொதுச்சபை கூட்டத்தொடர் நேற்று ஆரம்பம்

ஜெனிவா, செப்.19



ஐக்கிய நாடுகள் பொதுச்சபையின் 78 ஆவது கூட்டத்தொடர் நேற்று ஆரம்பமாகியுள்ள நிலையில், நாளை மறுதினம் 21ஆம் திகதிவரை இந்தக் கூட்டத்தொடர் நடைபெறவுள்ளது.
2030 ஆம் ஆண்டு நிகழ்ச்சி நிரலுக்கான அமைதி, சுபீட்சம், முன்னேற்றம் மற்றும் நிலைபேற்றுத்தன்மை ஆகியவற்றின் அடிப்படையில் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்கான நடவடிக்கைகளை துரிதப்படுத்துவதற்கான நம்பிக்கையை மீண்டும் கட்டியெழுப்புதல் மற்றும் உலகளாவிய ஒத்துழைப்பை மீண்டும் உருவாக்குதல் என்ற தொனிப்பொருளின் கீழ் இந்த ஆண்டு கூட்டத்தொடர் இடம்பெறவுள்ளது.
கூட்டத்தொடரில் பங்கேற்பதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்றுமுன்தினம் அதிகாலை நியூயோர்க் நகரைச் சென்றடைந்தார். அவர் நாளைமறுதினம் கூட்டத்தொடரில் விசேட உரையாற்றவுள்ளார்.
கூட்டத்தொடரில் பங்கேற்கும் பல அரச தலைவர்களுடன் இருதரப்பு கலந்துரையாடல்கள் நடத்தப்படவுள்ளன என்றும், கடல்சார் நாடுகளுக்கான ஆசிய -பசுபிக் தீவு நாடுகள் கலந்துரையாடலிலும் ஜனாதிபதி பங்கேற்பார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஏ-இ)

# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** உற்சாகமாகக் காணப்படுவீர்கள். எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. புதிய முயற்சிகளைத் தவிர்ப்பது நல்லது. ஆதாயம் உண்டாகும்.

**இடபம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. செலவுகள் ஏற்படக்கூடும். உங்கள் முயற்சிக்கு வாழ்க்கைத் துணையின் ஆதரவு கிடைக்கும்.

**மிதுனம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. உறவினர்கள் உதவி கேட்டு வருவார்கள். தாய்மாமன் வழியில் செலவுகள் ஏற்படக்கூடும்.

**கடகம்:** மகிழ்ச்சியான நாளாக அமையும். காரியங்கள் அனுகூலமாக முடியும். புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். உறவுகளால் ஆதாயம் உண்டாகும். மகிழ்ச்சியும் உற்சாகமும் பெறுவீர்கள்.

**சிம்மம்:** உறவுகளிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். மாலையில் குடும்பத்தினருடன் சிலருக்கு தெய்வப் பிரார்த்தனைகளை நிறைவேற்றும் வாய்ப்பு ஏற்படும். வழிபடுவது நலம் தரும்.

**கன்னி:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். வழக்கமான பணிகளிலும் கூடுதல் கவனம் தேவை. மற்றவர்களுடன் வீண் மனஸ்தாபம் ஏற்படக்கூடும். பேசும்போது பொறுமை அவசியம்.

**துலாம்:** பொறுமையுடன் செயற்படவேண்டிய நாள். திடீர் செலவுகளால் கடன் வாங்கவும் நேரிடும். உறவினர் வருகை உற்சாகம் தரும். வியாபாரம் எதிர்பார்த்தபடி இருக்கும்.

**விருச்சிகம்:** உற்சாகமான நாள். தொட்ட காரியங்கள் வெற்றிகரமாக முடியும். உறவுகளால் எதிர்பாராத பணவரவுடன், எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும். மறைமுக எதிர்ப்புகள் நீங்கும்.

**தனுசு:** சுறுசுறுப்பாகவும் பரபரப்பாகவும் செயற்படும் நாள். குடும்பத்தில் உங்கள் ஆலோசனைக்கு முக்கியத்துவம் கிடைக்கும். பிள்ளைகளால் பெருமை உண்டாகும்.

**மகரம்:** அனுகூலமான நாள். தாயின் விருப்பத்தைப் பூர்த்தி செய்வீர்கள். இளைய சகோதர வகையில் செலவுகள் ஏற்படக்கூடும். மற்றவர்களுடன் வாக்குவாதம் செய்வதைத் தவிர்க்கவும்.

**கும்பம்:** மனதில் தன்னம்பிக்கையும் தைரியமும் அதிகரிக்கும். முக்கியமான முடிவு எடுப்பதற்கு உகந்த நாள். பிணக்குகள் நீங்கும். உறவினர்கள் வருகையால் வீட்டில் மகிழ்ச்சி உண்டாகும்.

**மீனம்:** புதிய ஆடை, ஆபரணங்களை வாங்கும் யோகம் உண்டாகும். உறவினர்கள் வருகையால் வீட்டில் கலகலப்பான சூழ்நிலை ஏற்படும். தாயின் தேவையைப் பூர்த்தி செய்வீர்கள்.

# இலங்கைத் தமிழருக்கு ஆயிரத்து 591 வீடுகள்

சென்னை, செப்.19
தமிழகத்தில் உள்ள 13 மாவட்டங்களில் இலங்கைத் தமிழர்களுக்கு ஆயிரத்து 591 வீடுகள் வழங்கப்பட்டுள்ளன. தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வேலூரில் உள்ள 220 வீடுகளைப் பயனாளிகளிடம் கையளித்தார்.
தமிழகத்தின் 29 மாவட்டங்களில் உள்ள 104 இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாம்களில் மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ள 7 ஆயிரத்து 469 வீடுகள் புதிதாகக் கட்டித் தரப்படும் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் 2021 ஆம் ஆண்டு சட்ட சபையில் அறிவித்திருந்தார்.
இந்தத் திட்டத்தின் கீழ் முதல் கட்டமாக 176.02 கோடி ரூபா (இந்திய நாணய மதிப்பு) மதிப்பில் மொத்தம் 3 ஆயிரத்து 510 வீடுகள் கட்டும் பணி 2021 ஆம் ஆண்டு வேலூர் அருகே மேல்மொணவூர் இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாமில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.
13 மாவட்டங்களில் உள்ள 19 இலங்கைத் தமிழர் முகாம்களில் மொத்தம் ரூ.79.70 கோடி ரூபா மதிப்பில் ஆயிரத்து 591 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. (ஏ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## நினைவேந்தல்களும் கனதியும்

தியாக தீபம் திலீபனை வெறுமனே ஒரு போராளியாக மட்டும் தமிழ் மக்கள் நினைவுகூர்வதில்லை. அகிம்சையெனும் ஆயுதம் கொண்டு, ஒரு வல்லாதிக்க நாட்டை எதிர்த்துப் பட்டினிப் போரில் குதித்து, தன்னை ஆகுதியாக்கிய திலீபனுக்கு தமிழ்மக்கள் அதியுன்னத இடத்தையே தம் மனதில் கொடுத்துள்ளார்கள். அதனால்தான் ஆயுதப்போரில் மடிந்த ஏனைய மறவர்களை ஒன்றாக மாவீரர் நாளில் நினைவேந்தும் தமிழ் மக்கள், திலீபனை மட்டும் பன்னிரு நாள்கள் தொடர்ச்சியாக மனதில் இருத்தி அஞ்சலிக்கின்றனர். ஏறக்குறைய இந்தப் பன்னிரு நாள்களையும் விரதகாலம் போன்று அனுஷ்டிக்கவும் செய்கிறோம். திலீபனின் நினைவேந்தல் காலத்தில் எந்தவிதக் கொண்டாட்டங்களையும் நடத்துவதும் இல்லை. அந்தளவுக்கு தமிழர்களின் ஆன்மாவாக, உணர்வுகளோடு கலந்துவிட்டவன் திலீபன். அப்படிப்பட்ட திலீபனின் நினைவூர்தி திருகோணமலையில் சிங்களக் காடையர்களால் நேற்றுமுன்தினம் அடித்து நொருக்கப்பட்டிருக்கிறது.

அகிம்சையின் வழிநின்று போராடியவனின் நினைவூர்தியைக்கூட சிங்களப்பேரினவாதம்விட்டுவைக்கவில்லை. ஒருசில காடையர்களே இந்தத் தாக்குதலை நடத்தினாலும், அவர்கள் சுயமாக இந்தச் செயலில் இறங்கியிருப்பார்கள் என்பதை சிறுகுழந்தை கூட நம்பாது. அதிகாரத்தின் கரங்களே இந்தக் காடையர்கள் என்னும் பொம்மைகளை இயக்கும் சூத்திரதாரிகள். கடந்த காலங்களில் திலீபனின் நினைவேந்தலைத் தடுக்க அரசாங்கம் தலையால் கிடங்கு கிண்டியும் இயலாததாகப் போயிருந்தது. திலீபனின் நினைவேந்தல் வன்முறையைத் தூண்டுவதாகவோ, இனக்குரோதத்தை உண்டுபண்ணுவதாகவோ அமைவதில்லை என்பதால், சட்டரீதியான தடைகளைப் பெற அரசால் முடிந்திருக்கவில்லை. இப்படிப்பட்ட நிலையில், திலீபனின் நினைவூர்தியை அடித்து நொருக்கி, ஒரு கலவர நிலையைத் தோற்றுவித்தால், அதனைவைத்து 'திலீபனின் நினைவூர்தியால் இனங்களுக்கிடையே விரோதம் அதிகரிக்கிறது' என்பதைக் காட்டி நீதிமன்றத் தடையை வாங்கலாமென அரசயந்திரம் சிந்தித்திருக்கக் கூடும்.


தமிழ் மக்களின் நினைவேந்தும் உரிமையை இல்லாமலாக்க என்னென்ன வழிகள் உண்டோ அவற்றையெல்லாம் சிங்களப் பேரினவாதம் செய்தே தீரும். இத்தகைய நிலையில் தமிழர் தரப்பு மிகச் சாதுரியமான காய்நகர்த்தல்களை மேற்கொள்ளவேண்டும். எங்கெல்லாம் குழப்பம் ஏற்படுமென எதிர்பார்க்கிறோமோ அங்கெல்லாம் இயன்றவரை அதைத் தவிர்ப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டேயாக வேண்டும். சிறுசிறு காடையர் கும்பலால் இந்த நினைவூர்திக்குச் சிக்கல் வருமென, திருகோணமலைத் தாக்குதலுக்கு முதல்நாளே தெரிந்திருந்தது.

அக்கரைப்பற்றில் ஒரு கும்பல் பதாகைகளோடும், கோஷங்களோடும் நினைவூர்திக்கு தன் எதிர்ப்பை வெளியிட்டிருந்ததோடு, அச்சுறுத்தும் வகையிலும் நடந்துகொண்டிருந்தது. எனவே ஒன்றில் இவ்வாறான அச்சுறுத்தல்களை எதிர்கொள்ளும் வகையில் நினைவூர்தியின் ஆளணியை அதிகரித்திருக்கவேண்டும் அல்லது குழப்பமான பகுதிகளைத் தவிர்க்கும் வகையிலான புதிய வழித்தடத்தில் நினைவூர்தியைக் கொண்டு சென்றிருக்கவேண்டும். மாறாக நாலைந்துபேரோடு, காடையர் உள்ள பகுதியால் ஊர்தி சென்றால் இப்படியான தாக்குதல்களைக் கண்டு நினைவூர்தியோடு தப்பியோடும் நிலை ஏற்படவே செய்யும்.

சும்மாயிருந்த திலீபனின் ஆன்மாவை ஊர்தியாக எடுத்துச் சென்று இப்படி சிங்களக் காடையர்கள் அடித்து நொருக்க வழிவகுப்பது, திலீபனின் புனிதத்துக்கும், தியாகத்துக்கும் நாம் செய்யும் அவமானமாகவே அமையும். எனவே இனியாவது தன்முனைப்பு அரசியலையும், தனித்தவில் வாசிக்கும் அரசியலையும் விடுத்து, எல்லோரும் ஒன்றிணைந்து நினைவேந்தல்களையும், இதுபோன்ற நினைவூர்திகளையும் மேற்கொள்ளவேண்டும். ஆயிரக்கணக்கானோர் அணிதிரண்டு வந்தால், ஐந்தாறு காடையர்களால் தலைகுனிவதைத் தவிர வேறென்ன செய்யமுடியும்? நினைவேந்தல்களின் ஆளணியையும், கனதியையும் அதிகரிப்பதே திலீபன் முதலான மக்களுக்காக மடிந்த மறவர்களின் தியாகத்துக்கு நாம் செய்யும் கைமாறாகவும் இருக்கமுடியும்.

### நாளொரு நல்வார்த்தை

போராடும் குணத்தைக் கைவிட மறுக்கும் மனிதனுக்கு வெற்றி என்பது எப்போதுமே சாத்தியமான ஒன்றுதான்.
– எழுத்தாளர் நெப்போலியன் ஹில்




# நாணய நிதியத்தின் உதவி நாட்டுக்குப் பெரும் கேடே!

## 45 வீதமான இலங்கையர்கள் அச்சம்

கொழும்பு, செப்.19

**சர்வதேச நாணய நிதியம் இலங்கைக்கு வழங்கிய 2.9 பில்லியன் அமெரிக்க டொலர் கடன் எதிர்காலத்தில் நாட்டின் பொருளாதாரத்தை மோசமாக்கும் என 45 வீதமான இலங்கையர்கள் நம்புகின்றனர் என்று 'வெரிட்டி ரிசேர்ச்' அண்மையில் நடத்திய ஆய்வில் தெரியவந்துள்ளது.**

சர்வதேச நாணய நிதியத்தின் கடன் இலங்கையின் பொருளாதாரத்தில் சாதகமான விளைவை ஏற்படுத்தும் என இலங்கை மக்களில் 28 வீதமானவர்கள் மாத்திரமே நம்புகின்றனர் என்றும் அந்த ஆய்வு நிறுவனம் தெரிவித்துள்ளது.

இந்தக் கணக்கெடுப்புக்காக ஆயிரத்து 8 அனுபவசாலிகளின் மாதிரியை 'வெரிட்டி ரிசேர்ச்' தேர்ந்தெடுத்துள்ளது. இலங்கையில் செயற்படும் சர்வதேச நாணய நிதியத் திட்டம் நாட்டின் பொருளாதாரத்தைத் தற்பொழுதும், எதிர்காலத்திலும் எவ்வாறு பாதிக்கும் என மாதிரிக் கேள்வியும் கேட்கப்பட்டது.

அந்தக் கேள்விக்குப் பதிலளிக்க 5 பதில்கள் மாதிரிப் பதில்களும் கொடுக்கப்பட்டன. ஆயிரத்து 8 பேர் அளித்த பதில்களின்படி கணக்கெடுப்பின் முடிவுகள் தயாரிக்கப்பட்டுள்ளன. (எ-இ)

# மகப்பேற்றுச் சிகிச்சைகளில் நுண்ணறிவு தொழில்நுட்பம்!

## குடும்ப நல சுகாதாரப் பணியகம் ஆராய்வு

இலங்கையில் உள்ள மகப்பேறு மற்றும் சிறுவர் சிகிச்சை நிலையங்களில் செயற்கை நுண்ணறிவைப் பயன்படுத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. குடும்ப நல சுகாதாரப் பணியகம் இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளது.

இதற்கான முதற்கட்டத் தரவு சேகரிப்புப் பணிகள் அடுத்த மாதம் மேற்கொள்ளப்படும் என்று குடும்பநல சுகாதார நிபுணர் கபில ஜயரத்ன தெரிவித்தார்.

கனேடிய அரசாங்கத்தின் உதவியுடன் பல்வேறு முகவர் நிலையங்கள் மற்றும் சர்வதேச மையத்தின் கீழ் இந்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட உள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

செயற்கை நுண்ணறிவைப் பயன்படுத்தி கரு, தாய் மற்றும் குழந்தைக்கும் ஏற்படும் சிக்கல்களை மருத்துவர்களால் எதிர்காலத்தில் கணிக்கமுடியும் என்று குடும்பநல சுகாதார நிபுணர் கபில ஜயரத்ன குறிப்பிட்டார். (எ-இ)

# எம்.பி.யை இலக்கு வைத்து துப்பாக்கிச் சூடு

நாடாளுமன்ற உறுப்பினர் உத்திக பிரேமரத்னவை இலக்கு வைத்து துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். துப்பாக்கிச் சூட்டில் எவருக்கும் காயம் ஏற்படவில்லை என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த பொதுத் தேர்தலில் சிறிலங்கா பொதுஜன பெரமுன சார்பில், நாடாளுமன்ற உறுப்பினராக உத்திக பிரேமரத்ன தெரிவு செய்யப்பட்டார். அவர் தற்போது நாடாளுமன்றில் சுயேச்சையாகச் செயற்பட்டு வருகின்றார். (எ-இ)

## நாளை

20.09.2023
புதன்கிழமை
புரட்டாதி 03

சுபநேரம் : 04.33 - 06.03
ராகுகாலம் : 12.03 - 01.33

சஷ்டி விரதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சொற்பொழிவு

யாழ்ப்பாணம், செப்.19
நீர்வேலி அருள்மிகு கந்த சுவாமி தேவஸ்தானம் நடத்தும் வாராந்தச் சுக்கிரவாரச் சிறப்புச்சொற்பொழிவு எதிர் வரும் 22ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு ஆலய சண்முக விலாச மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சிவநெறிப் பிரகாசர் சமய ஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் நடைபெறும் நிகழ்வில் சிறப்புச்சொற்பொழிவை சைவப்புலவர் க.கயிலைவாசன் "திருப்பெரும் வடிவம்" எனும் தொனிப்பொருளில் ஆற்றவுள்ளார்.

சொற்பொழிவில் இருந்து மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பாராட்டுப் பரிசில்கள் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ய)

✦ ✦ ✦

யாழ்ப்பாணம், செப்.19
சைவ வாழ்வியலில் பெரிய புராணம் பெறும் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக வாராந்த பெரிய புராணச் சிறப்புச் சொற்பொழிவுத் தொடர் -24 எதிர்வரும் 22ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு யாழ்ப்பாணம் சாவக்கட்டு ஆனைக்கோட்டை அந்திக்குழி அருள்மிகு ஸ்ரீ ஞான வைரவர் காளி அம்பாள் தேவஸ்தானப் பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சேக்கிழார் பெருமானின் குருபூஜையை தொடர்ந்து சொற்பொழிவை இளஞ் சைவப்புலவர் க. கைலநாதன் "இறையருளால் காசைப் பெற்று சிவார்ச்சனை செய்து வாழ்ந்த நாயனார்" எனும் தொனிப்பொருளில் ஆற்றவுள்ளார். சொற்பொழிவில் இருந்து மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பாராட்டுப் பரிசில்கள் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ய)

# கிராம வளங்களை அழிக்கும் அமைச்சர் டக்ளஸின் திட்டம்!

### அனைத்து மக்கள் ஒன்றியம் குற்றச்சாட்டு

கிளிநொச்சி, செப்.19

**அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் திட்டங்கள் எமது வளங்களை அழிப்பனவாகவே இருக்கின்றன. எமது கிராமங்கள் அழிக்கப்படுவதை நாம் அனுமதிக்கமாட்டோம் - இவ்வாறு அனைத்து மக்கள் ஒன்றியத்தின் தலைவர் வல்லிபுரம் பாஸ்கரன் தெரிவித்தார்.**

இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது:-
பொன்னாவெளிக் கிராமத்தில் டோக்கியோ சிமெந்து நிறுவனத்தால் சுண்ணக்கல் அகழ்வுக்கான பூர்வாங்க வேலைகள் முடிக்கப்பட்டுள்ளன.

இதற்கு கிராஞ்சி, பொன்னாவெளி கிராம மக்களாகிய நாம் கடும் எதிர்ப்பைத் தெரிவித்து வருகின்றோம். இந்த நடவடிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்து 46 ஆவது நாளாகத் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளோம். மக்களின் நலன்களுக்கு மாறான எந்தத் திட்டத்தையும் எமது மக்கள் ஏற்றுக் கொள்ளமாட்டார்கள். அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவால் கொண்டுவரும் திட்டங்கள் எமது வளங்களை அழிப்பனவாகவே இருக்கின்றன.

கடலட்டைப் பண்ணை, சிமெந்துத் தொழிற்சாலைக்கான சுண்ணக்கல் அகழ்வு என்பன அதற்கு உதாரணங்களாகும். சுண்ணக்கல் அகழ்வு நடந்தால் கிராமத்தை விட்டு மக்கள் வெளியேற வேண்டிய நிலைமை ஏற்படும்.

மக்களின் விருப்பத்துக்கு மாறான இந்தத் திட்டத்தைத் தடுத்து நிறுத்த அக்கறையுள்ள அனைவரும் எங்களுடன் கைகோர்க்க வேண்டும் - என்றார். (எ-214)



### தாராபுரம் அல் - மினா மகா வித்தி

# அதிபரின் நியமனத்துக்கு பெற்றோர் சிலர் எதிர்ப்பு!

மன்னார், தாராபுரம் அல் - மினா மகா வித்தியாலயத்துக்கு புதிய அதிபர் நியமிக்கப்பட்டுள்ள நிலையில் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து பெற்றோர் சிலர் நேற்றுக் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

வித்தியாலயத்தின் புதிய அதிபர் நேற்றுத் தன் கடமைகளைப் பொறுப்பேற்றுக்கொண்டார்.

இந்தநிலையில் புதிய அதிபர் பாடசாலைக்குப் பொருத்தமானவர் அல்லர் என்று தெரிவித்து பெற்றோர் சிலர் பாடசாலையின் முன்பாக பாதாகைகளை ஏந்தி கவனவீர்ப்பில் ஈடுபட்டனர். (எ-60)

# இலவச யோகா கற்கை

யாழ்ப்பாணம், செப். 19
வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் இளைஞர் விவகார அலகால் இலவச யோகாக் கலை அடிப்படைக் கற்கை நெறியின் புதிய பிரிவு நல்லூர் மங்கையற்கரசி வித்தியாலயத்தில் எதிர்வரும் 23ஆம் திகதி சனிக்கிழமை காலை 6 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

சனி, ஞாயிறு தினங்களிலும் அரசவிடுமுறைதினங்களிலும் காலை 6 மணிமுதல் காலை 8 மணிவரை நடைபெறும் இந்த வகுப்புகளில் ஆர்வமுள்ள ஆண்கள், பெண்கள் இருபாலாரும் வயது வேறுபாடின்றிக் கலந்து கொள்ள முடியும். கற்கைநெறியைப் பூர்த்தி செய்பவர்களுக்கு கல்வி அமைச்சால் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ் வழங்கப்படும்.

இதேவேளை, யோகாக்கலைக் கற்கைநெறியைப் பயில விரும்புவோர் அன்று நேரடியாக வந்து பதிவுகளை மேற்கொண்டுவகுப்பில் இணைந்து கொள்ள முடியும்.

மேலதிக தகவல்களை 0212222203 எனும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொண்டு பெற்றுக் கொள்ள முடியும் என கல்வி அமைச்சின் செயலாளர் ம.பற்றிக் டிறஞ்சன் அறிவித்துள்ளார். (ய-66)

# சட்டவிரோத மணலகழ்வு 2 டிராக்டர்கள் பறிமுதல்!

கிளிநொச்சி, செப்.19
கிளிநொச்சி - தருமபுரம் கல்லாற்றுப் பகுதியில் அனுமதிப் பத்திரமின்றி மணல் அகழ்வில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் 2 உழவு இயந்திரங்களுடன் அதன் சாரதிகள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இராணுவத்தினருக்குக் கிடைத்த தகவலுக்கமைய நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இந்தக் கைது இடம்பெற்றது.

சந்தேகநபர்களும் சான்றுப்பொருள்களும் சட்டநடவடிக்கைக்காக தருமபுரம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டனர். (ச-113)



# சுழன்றடித்த காற்றால் கட்டுப்பாடிழந்த ஓட்டோ

### குழந்தைகள் உட்பட நால்வர் காயம்

யாழ்ப்பாணம் நாவற்குழிப் பகுதியில் நேற்றுமுன்தினம் நடந்த விபத்தில் 2 குழந்தைகள் உட்பட நால்வர் காயமடைந்துள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் இருந்து பூநகரி நோக்கி பயணித்த முச்சக்கர வண்டி கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகி மின்கம்பத்துடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது. முச்சக்கரவண்டியில் பயணித்த சாரதி, 2 குழந்தைகள் மற்றும் குழந்தைகளின் தாய் ஆகியோரே காயமடைந்துள்ளனர். இவர்கள் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

அதிக காற்றுக் காரணமாகவே முச்சக்கரவண்டி கட்டுப்பாட்டை இழந்தது என்று கூறப்படுகின்றது. விபத்துத் தொடர்பான விசாரணைகள் சாவகச்சேரி பொலிஸாரால் முன்னெடுக்கப்படுகின்றன. (எ-20)

# கிளிநொச்சி மருத்துவமனையில் நோயாளர் குறைநிவர்த்திப் பிரிவு

### உலக நோயாளர் பாதுகாப்புத் தினத்தில் ஆரம்பிப்பு

உலக நோயாளர் பாதுகாப்புத் தின நிகழ்வு கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனையில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.

நிகழ்வில் 'நோயாளர்களை எப்படிப் பாதுகாக்க வேண்டும்' எனும் தொனிப்பொருளில் கருத்துகள் பரிமாறப்பட்டன.

தொடர்ந்து மருத்துவமனைக்கு வரும் நோயாளர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பில் குறைநிவர்த்தி செய்யும் பிரிவு ஒன்றும் மருத்துவமனையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்தப் பிரிவினூடாக நோயாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை முறையிட்டு தீர்வைப் பெற்றுக்கொள்ளலாம் . 1907என்ற எண்ணுக்கு அழைப்பு ஏற்படுத்தியும் சேவையைப் பெற்றுக்கொள்ளலாம் என மருத்துவமனை நிர்வாகத்தினர் தெரிவித்தனர்.

நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனை பணிப்பாளர் சுகந்தன், சட்ட மருத்துவ அதிகாரி தனுசன், மருத்துவர்கள், தாதியர்கள் மற்றும் மருத்துவமனை நலன்புரிச் சங்கத்தினர் பங்கேற்றனர். (ச-113)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# REGIONAL DIRECTORATE OF HEALTH SERVICES, JAFFNA
## INVITATION FOR BIDS
### Procurement of Generator

A. The Regional Procurement Committee invites sealed bids from eligible and qualified bidders for the Supplies, Works as specified following Tables.
- Generator
  Bidding will be conducted through National Competitive Bidding Procedure

B. To be eligible for contract award the successful bidder shall not have been blacklist and shall need the following requirements
- Bidders shall have valid business registration
- and business registration for supply of respective Works, Supplies and Service
- Regional preference and CIDA grade preference will be apply as stipulated in Public Finance Circular No 4/2016(11)

C. Interested eligible bidders may obtain further information from the Regional Director of Health Services, Jaffna Contact No (021 2226253, 0212224966), during the office hours and inspect the Bidding Documents at the same address any working days for 9.00 am to 3.00 pm except 12.30 to 13.30 hours

D. A complete set of English Bid documents may be purchased by interested bidders on the submission of "Application for Bid Documents" available in this office and upon payment of a **non-refundable fee as** specified in the table by cash on working days from 19.09.2023 to 09.10.2023 during 09.00 Hours to 15.00 Hours.

E. Bids must be delivered on or before 10.30 am of 10.10.2023 to the address given below or deposited in the tender box available at the Room of **Additional Regional Director of Finance (TPM).** Bids will be opened immediately after the closing of the bids in the presence of the bidders or their representatives.

F. Bid shall be valid for a remind 90 days from the last date fixed for receiving of Bids or any extended period and Bid Security valid for 118 days from the bid opening.

G. Pre bid meeting under following on 27.09.2023 at 10.30 am in RDHS Office Jaffna.

I. Procurement committee will be the right to make final decision in regard the accept or reject Bid

| Reference No | Item | Qty | Nonrefundable fees | Bid Security |
|---|---|---|---|---|
| NP/RDHS/PSSP /Generator/2023/02 | 400kVA Generator with 630 Amp Automatic Transfer Switch | 01 | 2,000.00 | 480,000.00 |

Chairperson
Regional Procurement Committee
RDHS Jaffna.

(cr 40590) (N.1)

# அறிவித்தல்

வேளாவை. அளவெட்டி மத்தியில் வசித்து வரும். திரு.வை சுப்பிரமணியம் ஆகிய நான் கடந்த 21 வருடங்களாக அளவெட்டி மகாஜன சபை சனசமூக நிலையத்தின் தலைவராகப் பதவி வகித்து வந்துள்ளேன். தற்போது எனது தனிப்பட்ட காரணங்களுக்காக **10.08.2023** ஆம் திகதி முதல் அளவெட்டி மகாஜன சபையின் தலைவர் பதவியில் இருந்து விலகி உள்ளேன். இது தொடர்பான பதவி விலகல் கடிதத்தை செயலாளர் திரு.அ.மயூரன் அவர்களிடம் கையளித்து உள்ளேன்.

ஆகவே மேற் குறிப்பிட்ட திகதியின் பின்னர் அளவெட்டி மகாஜன சபையினர் எடுக்கும் நிர்வாகம். நிதி தொடர்பான எந்த தீர்மானங்களுக்கும் நான் பொறுப்பாளியல்ல என்பதை சகலருக்கும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு.வை.சுப்பிரமணியம்**

(cs.52142) (N.1)

# கிருஸ்ணா அடைவுகடை

**பதிவு இல. J/DS/BR/472**

மேற்குறிப்பிட்ட எமது ஸ்தாபனத்தில் 2022 ஆம் ஆண்டு 31.12.2022 இற்கு முன்னர் அடகு வைத்த நகைகள் யாவற்றையும் 2023 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 15 ஆம் திகதிக்கு (15.10.2023) முன்னர் மீட்கவும். மீட்க முடியாவிட்டால் ஒரு பகுதி பணத்தைக் கட்டிப் புதுப்பித்துக் கொள்ளவும். புதுப்பிக்க தவறின் 15.10.2023 ஆம் திகதியன்று விற்கப் படும் என்பதனை வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம்.

**குறிப்பு:** 2022 ஆம் ஆண்டு 12 ஆம் மாதம் 31 ஆம் திகதிக்கு முற்பட்ட நகைகள் யாவும் விற்கப்படும்.

**இல.370, கே.கே.எஸ். வீதி,**
**யாழ்ப்பாணம்.**
**021 490 0311**
**021 222 5180**
**077 080 4656**

**உரிமையாளர்**
**இல.09, கன்னாதிட்டி வீதி,**
**யாழ்ப்பாணம்.**
**021 222 5046**

(cs.52106)(N-1)

# மரண அறிவித்தல்



**தோற்றம்** 06 • 02 • 1948

**மறைவு** 14 • 09 • 2023

## கந்தசாமி செல்வராணி

மயிலிட்டியைப் பிறப்பிடமாகவும் கதிரைமலை வீதி, சுன்னாகம் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தசாமி செல்வராணி கடந்த (14.09.2023) அன்று காலை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் சின்னத்தங்கம் தம்பதியரின் பாசமிகு மகளும், காலஞ்சென்றவர்களான சரவணமுத்து குழந்தை நாச்சிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற கந்தசாமியின் பாசமிகு மனைவியும், புவனேஸ்வரி, காலஞ்சென்ற ஆனந்தக்குமாரசாமி மற்றும் பரமேஸ்வரி, அருளானந்தகுமாரசாமி ஆகியோரின் அன்புச் சகோதரியும், சசிகலா (ஜேர்மனி), கலாவதி, விஷ்ணுகாந்தன் (ஜேர்மனி), காந்தரூபன் (கனடா), அமுதகலா ஆகியோரின் அன்புத் தாயாரும், துரைசிங்கம் (ஜேர்மனி), பாலகிருஷ்ணன், தர்மினி (ஜேர்மனி), லேகா (கனடா), செந்தில்ராஜா ஆகியோரின் அன்பு மாமியாரும், டிசாந்தன், மகிபா, சத்தியரூபன், சாரங்கன் (ஜேர்மனி), யதுர்சன் (ஜேர்மனி), கரி (ஜேர்மனி), மதுரி (ஜேர்மனி), ஷரன் (கனடா), பவிலாஸ் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், கபிசனின் பூட்டியும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (20.09.2023) புதன்கிழமை காலை 8.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 10.00 மணியளவில் கொட்டுப்புலம் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
**கலாவதி - மகள் - 077 325 4906**
**டிஷாந்தன் - பேரன் - 077 363 2031**

**தகவல்: குடும்பத்தினர்**

ஓம் விராட் விஸ்வ பிரம்மனே நமஹ

# மரண அறிவித்தல்



**தோற்றம்** 20 • 12 • 1936

**மறைவு** 16 • 09 • 2023

## அம்பலவாணர் கனகசபை
(ஆசாரியார்)

புங்குடுதீவு 4ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கோண்டாவில் கிழக்கு மற்றும் குட்செற்றோட், வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட அம்பலவாணர் கனகசபை (ஆசாரியார்) கடந்த (16.09.2023) சனிக்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அம்பலவாணர் தெய்வானைப்பிள்ளை தம்பதியினரின் மகனும், காலஞ்சென்றவர்களான முருகேசு சின்னாச்சி தம்பதியினரின் மருமகனும், காலஞ்சென்ற கமலாம்பிகையின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான கதிரவேலு, முத்தையா, கணபதிப்பிள்ளை, பொன்னம்மா, செல்லம்மா, கனகம்மா ஆகியோரின் சகோதரரும், காலஞ்சென்றவர்களான நாகம்மா, கணேசு, கண்ணம்மா, செல்லம்மா, ஐயம்பிள்ளை ஆகியோரின் மைத்துனரும், நகுலேஸ்வரி லிங்கேஸ்வரன், லோகேஸ்வரி, பரமேஸ்வரன், மகாலக்ஷ்மி, வாகீஸ்வரி, ஜெகதீஸ்வரன் ஆகியோரின் தந்தையும், காலஞ்சென்ற தயானந்தன் மற்றும் கார்த்திகா, இலங்கநாதன், துஷியந்தி, திருமாறன், பிரதீசன், சுரேந்தினி ஆகியோரின் மாமனாரும், மயூரன், பிருதுவிராஜ், நிம்தே, இந்துஷா, சங்கீத், ஹம்சாரிணி, தவகணேஷ், சாகித்தியன், ஜெகதாரிணி, கம்சவர்தனன், அபிராமி, சந்தோஷ், சகானா, ஸ்ரீரங்கன், ஸ்ரீவத்ஸன், கௌதீஸ், பிரவகி ஆகியோரின் பாட்டனாரும், தோபியாஷின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.09.2023) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோண்டாவில் கிழக்கு கட்டையடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: பிள்ளைகள்.**

**செல்வநாயகம் ஒழுங்கை,**
**[illegible] வீதி,**
**கோண்டாவில் கிழக்கு,**
**கோண்டாவில்.**

தொடர்பு: **077 796 9802**
**076 072 7879**
**077 641 4623**

(CS 52150) N-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தவறவிடப்பட்டுள்ளது

2023.09.17 ஆம் திகதி பிற்பகல் மோட்டார் சைக்கிளில் சென்ற வேளை கைதடி கிழக்கில் அல்லது அண்டிய பகுதியில் இரும்பிலான வீட்டுக் கதவுத் திறப்பும் இரு ஆமைப் பூட்டுத் திறப்புகளும் ஒரே கோர்வையில் தவறிவிட்டன.

கண்டெடுத்த தவர்கள் **077 682 2392** இல் தொடர்புகொண்டு ஒப்படைத்துதவவும்.

(சன்மானம் உண்டு) (cs 26303) (N.1)

## கொய்யாத்தோட்டம் ஸ்ரீ ஞான செல்வ விநாயகர் ஆலய ராஜகோபுர மற்றும் மணிக்கூட்டுக் கோபுர நிர்மாண வேலைக்கான கூறுவிலை கோரல்

கொய்யாத்தோட்ட ஸ்ரீ ஞான செல்வ விநாயகர் ஆலய ராஜகோபுரத்தின் மற்றும் மணிக்கூட்டுக் கோபுரத்தின் நிர்மாண வேலைக்கான கூறுவிலை கோரல் ஆலய பரிபாலன சபையினாரல் கோரப்படுகின்றது.

தகைமையுடையவர்கள் ஆலயத்திற்கு நேரடியாக வருகை தந்து கூறு விலைப் படிவக் கட்டணம் ரூபா 2500.00 (மீளளிக்க முடியாதது) செலுத்தி கூறுவிலைப் படிவத்தினை பெற்றுக்கொள்ளலாம்.

பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்ப படிவத்தை **01.10.2023** ஆம் திகதி பிற்பகல் **3.00** மணிக்கு முன்னர் ஆலயத்திற்கு கிடைக்கக் கூடியதாக சீலிடப்பட்ட பதிவஞ்சல் மூலம் செயலாளர் ஸ்ரீ ஞான செல்வ விநாயகர் ஆலய பரிபாலன சபை. கொய்யாத்தோட்ம். யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பிவைக்க வேண்டும். நேரடியாக சமர்ப்பிக்க விரும்புபவர்கள் அதற்கென ஆலய பரிபாலன சபையினால் வைக்கப்பட்டுள்ள கூறுவிலைப் பெட்டியிலுள் இட முடியும்.

குறிப்பு:
1. பதிவு பெற்ற ஒப்பந்தக்காராக இருத்தல் வேண்டும்
2. ஆலய கட்டுமான வேலைகளில் முன் அனுபவம் இருத்தல் வேண்டும்.

(இவற்றுக்கான சான்றிதழ்களின் பிரதி கூறுவிலையுடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்.

தொடர்பு: **077 654 4500, 077 658 9391** செயலாளர்.

## விண்ணக வாழ்வில் 23ஆம் ஆண்டு நினைவஞ்சலி

விண்ணில் 08 . 12 . 1948

மண்ணில் 19 . 09 . 2000



**அமரர் அந்தோனிப்பிள்ளை அல்பிரட் யோகராஜா**

(ஓய்வுபெற்ற பொலிஸ் உத்தியோகத்தர்)

வாழ்க்கை பயணத்தில் எமக்கு வழிகாட்டியாக எம்மை
வையகத்தில் நல்வாழ்வு வாழ எமக்காக பரிந்து பேச
விண்ணகம் சென்ற எம் அன்புத்தந்தையே!
எம் வாழ்நாள் முழுவதும் உம்மை மறவோம்

உம் நினைவுகளுடன் வாழும்

2, இராசாவின் தோட்ட ஒழுங்கை, யாழ்ப்பாணம்.

அன்பு மனைவி, அருமைப் பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்

(CS 20760)(3.6)

## கண்ணீர் காணிக்கை

தோற்றம் 30 . 04 . 1944

மறைவு 16 . 09 . 2023



அமரர்

**அப்புத்துரை சதானந்தவேல் (மனுநீதி)**

அன்போடும் பாசத்தோடும் எம்மோடு இணைந்து
பண்புடன் வாழ்ந்த நீங்கள் எம்மை விட்டு மறைந்து
போனாலும் உன் பிரிவுத் துயரம் தாங்காது
அழுகின்றோம் - நெஞ்சோடு உங்கள் நினைவு
நித்தமும் உறவாட வைத்துச் சென்றீரே எம்மருகில்
இணைந்து நிற்கும் உணர்வுடன் அல்லவா
ஏங்குகின்றோம். உங்கள் பாச நினைவுகள்
என்றும் எங்களைவிட்டு அகலாது.
உங்கள் ஆத்மசாந்திக்காக இறைவனை
என்று என்றும் பிரார்த்திக்கின்றோம் - உங்கள்
பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எங்கள்
அனுதாபங்களை தெரிவித்துக்கொள்கின்றோம்.

பிரிவால் துயருறும்:

சுழிபுரம் பறாளாய் ஸ்ரீசிவசுப்பிரமணிய சுவாமி கோவில் தர்மகர்த்தா சபை

(CS 26308) A-1

## SPOKEN ENGLISH WITH GRAMMAR

யாழ் நகரில் தனி வகுப்பு

G.C.E O/L, A/L, பட்டதாரிகள்

தொழில்புரிபவர் ஆர்வமுள்ளவர்களுக்கு

K.Ganesh B.A **077 766 8725**

## வேலைக்கு ஆட்கள் தேவை

ஊரெழுவில் அமைந்துள்ள பிரபல உணவகத்திற்கு பின்வரும் வேலையாட்கள் தேவை.

* ரொட்டி போடத் தெரிந்தவர்கள்
* கொத்து / ரைஸ் போடுபவர்கள்
* உதவியாட்கள் (இருபாலாரும்)
* சமையலாளர் (இருபாலாரும்)

சம்பளம் பேசித்தீர்மானிக்கலாம்.

தொடர்பு:-

**074 230 1234, 075 230 1104**

(CS 26306) A-1

## யாழ்நகரில் காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கச்சேரிக்கு அருகாமையில் 31/2 பரப்புக் காணி இரண்டு வெட்டு கிணறுகளுடன் முழுமையாக உடன் விற்பனைக் குண்டு. இந்தக் காணி சுண்டுக்குளி தாய்நிலையைத்திற்கு அருகாமை யில் கச்சேரி நல்லூர் வீதியில் உள்ளது. எதிர்பாக்கப்படும் விலை 55 மில்லியனுக்கு மேலாக எதிர்பார்க்கப்படுகிறது.

தொடர்புகளுக்கு:

- Whatsapp : **+447963743585**
- மின்னஞ்சல் : **jamesraj_uk@yahoo.co.uk**
- Local Contact : **021 222 7141 (Srilanka)**

(cs 52141) (N.1)

## A/L General English Classes

A/L General English Classes for 2023 and 2024 batches will be conducted. Those who wish to join please contact before the 25th of September - 2023

Contact No:- **076 228 6960, 077 967 2863**

Address:- 75 / 2, Kandy Road, Chundukuli, Jaffna.

- Miss. A. R.Gregory -

(cs 52150) (N.1)

## தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கத்தின் விசேட பொதுக்கூட்டம்

மேற்படி கூட்டமானது பேரூந்து தரிப்பிடம் தொடர்பான கடிதம் மற்றும் திருத்த வேலைகள், பிறவிடயங்கள் என்பன தொடர்பான கலந்துரையாடல்களும், முடிவுகளும் எடுக்கப்படும்.

எதிர்வரும் **(24.09.2023)** ஞாயிற்றுக்கிழமை காலை **9.00** மணிக்கு **சங்கப் பணிமனையில்** நடைபெறவுள்ளதால் அனைத்து அங்கத்தவர்களும் தவறாமல் வருகை தருமாறு மிகவும் பணிவன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்

இணைச் செயலாளர்

(cs 52145) (N.1)

## மரண அறிவித்தல்

தோற்றம் 08 . 02 . 1937

மறைவு 17 . 09 . 2023



**திருமதி கந்தையா மகேஸ்வரி**

மல்லாகத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா மகேஸ்வரி கடந்த (17.09.2023) ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லத்துரை பொன்னம்மா தம்பதியரின் மூத்த மகளும், காலஞ்சென்ற பொன்னம்பலம் கந்தையாவின் மனைவியும், நாகேஸ்வரி சிவலிங்கம் அவரின் அன்புச் சகோதரியும், அமரர் மகாலட்சுமி, ஜெயலட்சுமி ஆகியோரின் அன்புத் தாயாரும், குகதாஸ், பாக்கியநாதன் ஆகியோரின் அன்பு மாமியாரும், பிருந்தாபன், மனைவி நிலாஜிதா, கீர்த்தனா கணவர் இரவீந்தர், துஷாரன், கஜவிந், ராகவிந் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், புவிசாவின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (20.09.2023) புதன்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக் காக மல்லாகம் நரியிட்டான் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
**குடும்பத்தினர்.**

(CS 26304) A-1

## மாபிள் வேலை

உங்கள் வீடுகளுக்கு தரமான முறையில் மாபிள் பதித்து தரப்படும்.

இழுத்து பதிக்க ஒரு சதுர அடி - 85 ரூபா

**077 334 1281** (cs 24748)

## விதைநெல், தென்னம்பிள்ளைகள் விற்பனைக்கு

மூன்றரை மாத அதிவிளைச்சல் தரக்கூடிய BG 34.6 இன விதைநெல், குறைந்த காலத்தில் பயன்தரக்கூடிய மற்றும் நல்லின தென்னம்பிள்ளைகள் விற்பனைக்குண்டு.

**077 659 2044**

(cs 40583) (N.1)

## தவறவிடப்பட்ட பொருள்கள் ஆதாரங்களுடன் பெறலாம்

யாழ்ப்பாணம் செப் . 19

நல்லூர் ஆலயப் பெருந்திருவிழாவின் போது பக்தர்களால் தவறவிடப்பட்ட பெறுமதி வாய்ந்த பொருள்கள்,ஆவணங்கள்,வங்கிப்பரிவர்த்தனைஅட்டை,பணப்பைகள்,மணிக்கூடு,தேசிய அடையாள அட்டை,திறப்புகள் என்பன யாழ்.மாநகர சபையின் உற்சவ காலப்பணிமனையில் ஒப்படைக்கப்பட்டு தற்போது மாநகரசபை அலுவலகத்தில் உள்ளன. இவற்றின் உரிமையாளர்கள் தகுந்த ஆதாரங்களுடன் உரிய அடையாளத்தை உறுதிப்படுத்தி மாநகரசபையின் நிர்வாகக் கிளையில் பிற்பகல் 2 மணி தொடக்கம் மாலை 4 மணி வரை பெற்றுக்கொள்ளமுடியும் என்று யாழ்.மாநகரசபை ஆணையாளர் அறிவித்துள்ளார். (ஒ-இ)

# சிமெந்து விலை அதிகரிப்பு

கொழும்பு, செப்.19

சிமெந்து விலை 100 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது என்று தேசிய நிர்மாணத்துறை சங்கத்தின் செயலாளர் சுபுன் அபேசேகர தெரிவித்துள்ளார்.

சிமெந்து விலை 300 ரூபாவால் குறைக்கப்படும் என வர்த்தக அமைச்சர் அறிக்கை வெளியிட்டபோதும், அதன் விலை மேலும் 100 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. சந்தையில் 2 ஆயிரத்து 100 ரூபாவாகக் காணப்பட்ட சிமெந்து பைக்கற் ஒன்று, தற்போது, 2 ஆயிரத்து 200 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகின்றது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நினைவு ஊர்தி மீது தாக்குதல் கண்டித்து நேற்று ஆர்ப்பாட்டம்

முல்லைத்தீவு, செப்.19

திருகோணமலையில் தியாகதீபம் திலீபனின் நினைவு ஊர்தி மீது தாக்குதல் நடத்தப்பட்டமையைக் கண்டித்து முல்லைத்தீவு, தேவிபுரத்தில் நேற்றுக் கண்டன ஆர்ப்பாட்டம் ஒன்று நடத்தப்பட்டது.

தாயக மற்றும் புலம்பெயர் நினைவேந்தல் குழுவின் ஏற்பாட்டில் தேவிபுரம், வள்ளிபுனம் கிராம மக்கள் ஒன்றிணைந்து இந்த ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத் தனர்.

(எ-19)


## பணிப்பெண் தேவை

யாழ். நகரப் பகுதியில் தங்கிநின்று வீட்டு வேலை செய்யக்கூடிய பெண் பணியாளர் தேவை.
கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.

தொடர்பு: 075 873 4301

## தவறவிடப்பட்டது

யாழ்ப்பாணம் செல்வசந்நிதி ஆலயத்துக்கும் புத்தூர் சந்திக்கும் இடையில் தங்க ஆபரணம் ஒன்று தவறவிடப்பட்டுள்ளது. இதனை கண்டெடுத்து தருபவர்களுக்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு:
077 8736687, 070 2717 690

(CS 26311) A-1



## 4 ஆம் மாத நினைவுநாளும் 76 ஆவது பிறந்ததினமும்

## இராமு நவரட்ணம்





மலர்வு 19.09.1947 உதிர்வு 26.05.2023

- கணப் பொழுதும் எண்ணவில்லை
  என் கலங்கரை - விளக்கே!
- நீங்கள் இமைப்பொழுதில் என்னை விட்டு
  அகல்வீர்கள் என
- அன்புடனும், பண்புடனும், பாசத்துடனும்
  வழிநடத்தி என்னை வாழவைத்த
  - தெய்வமே!
- நீங்கள் இல்லாத உலகம் என்றும்
  இருள் மயமானது
- எங்கே காண்பேன் உங்கள்
  - மலர்ந்த முகத்தை
  உங்கள் பிரிவைத் தாங்குமா
  - என் இதயம்......
- ஒவ்வொரு நொடியிலும் இதயத் துடிப்பை
  போல உணர்கின்றேன்.....
  நீங்கள் கடந்து சென்றாலும் என்
  அருகில் - நீங்கள் இருப்பதை நான்
  - உணர்கின்றேன்.

என்றும் பாசமுள்ள

மனைவி



கியூடெக் கரித்தாஸ் யாழ்ப்பாணம்
சூற்றுச் சூழல் பாதுகாப்பு செயற்திட்டத்தினால் நடாத்தப்படும்

## சர்வதேச சிறுவர் தினம் - 2023

இத்தினத்தில் ஓவியப்போட்டியும் கலை நிகழ்வும் நடைபெறும்

ஓவியப்போட்டிக்கான விபரம்
தலைப்பு :- "இயற்கையோடு இணைந்த நம் வாழ்வு"

பிரிவு 1 :- தரம் 4 - தரம் 5 வரை
பிரிவு 2 :- தரம் 6 - தரம் 8 வரை
பிரிவு 3 :- தரம் 9 - தரம் 12 வரை

விதிமுறைகள் : அளவு A3 வெள்ளைத் தாள்
விரும்பிய வர்ண வகை பயன்படுத்தலாம்.



இடம் :- சென்.ஜேம்ஸ் மகளிர் பாடசாலை மண்டபம்,
பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
காலம் :- 01.10.2023 ஞாயிற்றுக்கிழமை
நேரம் :- காலை 9.00 மணி

இப்போட்டியில் பங்குபற்ற விரும்பும் மாணவர்கள் அதிபரின் அனுமதியுடன் பெயர் விபரங்களை 25.09.2023 திகதிக்கு முன் பதிவு செய்யவும்

தொ.பேசி:-
021 222 7314, 077 670 1349

யாழ். கியூடெக் கரித்தாஸ்
14, மத்தியூஸ் வீதி, யாழ்ப்பாணம்.



## மரண அறிவித்தல்



## பத்மராணி கதிர்காமதாசன்

ஈச்சமோட்டையை பிறப்பிடமாகவும் தெல்லிப்பழையை வதிவிடமாகவும் கொண்ட கதிர்காமதாசன் பத்மராணி கடந்த (17.09.2023) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஆறுப்பிள்ளை கதிர்காமதாசனின் அன்பு மனைவியும், மோசேஸ் சின்னத்துரை தம்பதியரின் அன்பு மகளும், புளோரா, செல்வராசா, தேவராசா, சத்தியவதனி காலஞ்சென்றவர்களான யோகராணி, தவராஜா சிவராஜா ஆகியோரின் சகோதரியும், அமரர் சாவித்திரி, தங்கவதி ஆகியோரின் மச்சாளும், அமரர் அருநேஸ்வரன், அமுதினி, அருள்தாசன், அருந்தவநேசன், அருந்ததி, அனுசியா ஆகியோரின் பாசமிகு தாயாரும், சுபாஷினி, மலர்ச்செல்வன், றெனோல்ட், நிறைஞ்சனி, சயூரிகா, துவாரகன் ஆகியோரின் மாமியாரும், ஆதவன், யாதவன், வர்ஷா, றேனுஷன், றேனுஷா, கனுஷா, யுவிகரன், கவிநயா, சதுஷ்ரிகன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.09.2023) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் (அம்பனை தெல்லிப்பழை, மகாஜனக் கல்லூரியின் அருகாமையில்) நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 11.00 மணியளவில் தெல்லிப்பழை கொத்தியால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொடர்புகளுக்கு: 077 4020 433

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 26309) A-1



## 31 ஆம் நாள் வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த (20.08.2023) ஞாயிற்றுக்கிழமை
சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

அமரர்
### ஆறுமுகம் தவராசா

அவர்களின்
வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று
(19.09.2023) செவ்வாய்க்கிழமை முற்பகல்
10.00 மணியளவில் அன்னாரின்
இல்லத்தில் நடைபெறும். அத்தருணம்
தாங்கள் வருகைதந்து அன்னாரின்
ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும்,
அதனைத் தொடர்ந்து நடைபெறும்
மதியபோசன நிகழ்விலும்
கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னை இல்லம்
இல.40, ஆனைக்கோட்டை றோட்,
கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

குடும்பத்தினர்.
தொ.பே: 077 308 9338


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வலய மட்ட விஞ்ஞான ஒலிம்பியாட் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு வரணி மத்திய கல்லூரியில் அண்மையில் இடம் பெற்றது . பிரிவு - I இல் முதலாம் இடம் பெற்ற சசிக்குமார் பிரவீன், பிரிவு - II இல் முதலாம் இடம் பெற்ற ஜீவாகரன் தரணிகா, பிரிவு - III இல் இரண்டாம் இடம்பெற்ற யோகநாதன் லக்சிகன் ஆகிய மாணவர்கள் பாடசாலை விஞ்ஞான மன்றத்தால் பரிசில் வழங்கிக் கௌரவிக்கப் பட்டனர். (ய-159)

## ஆழிக்குமரன் நீச்சல் தடாகம் தொடர்பில் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், செப்.19

வல்வெட்டித்துறை நகரசபைக்குச் சொந்தமான ஆழிக்குமரன் ஆனந்தன் ஞாபகார்த்த நீச்சல் தடாகத்தை குத்தகைக்கு வழங்குவது தொடர்பான கலந்துரையாடல் நாளை புதன்கிழமை நடைபெறவுள்ளது என்று நகரசபைச் செயலாளர் அறிவித்துள்ளார்.

நகராட்சி மன்ற சபா மண்டபத்தில் மாலை 3 மணியளவில் உள்ளூராட்சி ஆணையாளரின் பங்குபற்றுதலுடன் இந்தக் கலந்துரையாடல் நடத்தப்படவுள்ளது என்றும், இந்த விடயத்தில் ஆர்வம் உள்ளவர்கள் அதில் பங்குபற்றி ஆக்கபூர்வமான கருத்துகளை வழங்கவேண்டும் என்றும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

வல்வெட்டித்துறை, ரேவடி கடற்கரைத் திடல் பகுதியில் அமைக்கப்பட்டு, 2019ஆம் ஆண்டு ஓகஸ்ட் 8ஆம் திகதி அப்போதைய நிதி அமைச்சர் மங்கள சமரவீரவால் திறக்கப்பட்டது. ஆயினும் கடந்த 4 ஆண்டுகளாக அது பயன்பாடற்று இருக்கின்றது. (எ-100)

## குடிதண்ணீர் விநியோகம் விஸ்தரிப்பு

தென்மராட்சியில் குடிதண்ணீர்ப் பற்றாக்குறை காணப்பட்ட 3 கிராமங்களுக்குக் குடிதண்ணீர் விநியோகம் நேற்றுமுதல் விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

வறட்சிக் காலங்களில் பிரதேச செயலகமும் இடர்கால முகாமைத்துவ அமைச்சும் இணைந்து குடிதண்ணீர்த் தட்டுப்பாடு காணப்படும் 25 கிராமங்களுக்கும், அங்குள்ள 17 பாடசாலைகளுக்கும் வாகனங்கள் மூலம் குடிதண்ணீர் விநியோகித்து வருகின்றனர்.

இந்தவருடத்தில் கிடைத்த நிதியைக் கருத்திற்கொண்டு முதற்கட்டமாக மிகவும் குடிதண்ணீர்த்தட்டுப்பாடு காணப்படும் 9 கிராமங்களுக்கு அண்மையில் குடிதண்ணீர் வழங்கும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. தற்போது நிதி கிடைத்துள்ளதை அடுத்து மேலும் 3 கிராமங்களுக்குக் குடிதண்ணீர் விநியோகம் விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

தனங்களப்பு, மறவன்புலவு, கோவிலாக்கண்டி, கைதடி, நாவற்குழி, நாவற்குழி கிழக்கு, நுணாவில், மட்டுவில் வடக்கு, சரசாலை தெற்கு, தாவளை இயற்றாலை, வரணி இயற்றாலை, கரம்பைக்குறிச்சி, இடைக்குறிச்சி ஆகிய 12 கிராமங்களுக்கும், அங்குள்ள பாடசாலைகளுக்கும் தற்போது குடிதண்ணீர் விநியோகம் மேற்கொள்ளப்படுகின்றது. (எ-9)

## மணல் தீடையில் மீட்கப்பட்ட இலங்கையர்

தமிழகத்தின் தனுஷ்கோடியில் மூன்றாம் மணல் தீடையில் இருந்து இலங்கைத் தமிழர் ஒருவர் மீட்கப்பட்டுள்ள நிலையில், அது தொடர்பில் தமிழகப் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர் என்று அங்கிருந்து கிடைத்த தகவல்கள் தெரிவித்தன.

மீட்கப்பட்ட நபர் மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்தவர் என்றும், தற்போது அவர் தனுஷ்கோடி பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டு வருகின்றார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (எ-100)

# சுகாதாரச் சிக்கல்களை தீர்க்காவிட்டால் ஆபத்து

### அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் சுட்டிக்காட்டு

**யாழ்ப்பாணம், செப்.19**

**தற்போது மருந்துத் தட்டுப்பாடு, சத்திர சிகிச்சை உபகரணங்களின் தட்டுப்பாடு, ஆய்வு கூட இரசாயனப் பதார்த்தங்களின் தட்டுப்பாடு என்பன தொடர்பில் அரசாங்கம் இதுவரை உரிய நடவடிக்கை எடுக்கவில்லை. இதனால் நோயாளர்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது.**

அவ்வாறு அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்ட இணைப்பாளர் மருத்துவர் விஜயரட்ணசிங்கம் தர்ஷன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

தரமான மருந்து இன்மை, அதனால் ஏற்படக்கூடிய பாதக விளைவுகள், மருத்துவர்கள், விசேட மருத்துவர்கள் நாட்டை விட்டு வெளியேறிச் செல்வதால் ஏற்படும் வெற்றிடங்கள் தவிர்க்கமுடியாத விளைவுகளை ஏற்படுத்தும்.

மருந்துத் தட்டுப்பாடு, தரமற்ற மருந்துகளைப் பாவனைக்கு உட்படுத்துவது, மருந்துகள் கொள்வனவு செய்யக்கூடிய விலைகளில் இல்லாமை, மருத்துவர்கள் நாட்டை விட்டு வெளியேறுவது என்பன தொடர்பாக பல முன்மொழிவுகள் வைக்கப்பட்டுள்ளன. முன்மொழிவுகளை ஆராய்ந்து குறைபாடுகளை நிவர்த்தி செய்து தரமானதும், இலவச சுகாதாரத்தை வழங்குவதும் அரசாங்கத்தின் கடப்பாடு ஆகும் - என்றார். (எ-23)

## குருதிக்கொடை

*யாழ்ப்பாணம், செப்.19*

*தியாகதீபம் திலீபன் நினைவாக யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் குருதிக்கொடை நிகழ்வு ஒன்றை ஏற்பாடு செய்துள்ளது.*

*இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணி முதல் மாலை 3 மணிவரை யாழ்ப்பாணம் பல்கலைக்கழக பிரதான வளாகத்தில் உள்ள மாணவர் கட்டடத் தொகுதியில் இந்தக் குருதிக்கொடை நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.*

*அதேவேளை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கிளிநொச்சி வளாகத்தில் உள்ள தொழில்நுட்பப் பீடத்தில் எதிர்வரும் 26ஆம் திகதி செவ்வாய்க்கிழமையும் காலை 9 மணி முதல் மாலை 3 மணிவரை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் குருதிக்கொடை நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (எ-66)*



## விபத்தில் பெண் காயம்

யாழ்ப்பாணம், செப்.19

சாவகச்சேரி ஆதார மருத்துவமனைக்கு அண்மையில் ஏ-9 வீதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற விபத்தில் பெண் ஒருவர் காயமடைந்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் இருந்து கொடிகாமம் நோக்கிப் பயணித்த முச்சக்கரவண்டியுடன், சாவகச்சேரி ஆதார மருத்துவமனைக்கு அண்மையில் உள்ள கிளை வீதி ஒன்றின் ஊடாக வேகமாக வந்த மோட்டார்சைக்கிள் மோதியதில் இந்த விபத்து நடந்துள்ளது.

விபத்தில் முச்சக்கரவண்டி தடம்புரண்ட நிலையில், அதில் பயணித்த பெண் காயமடைந்துள்ளார். விபத்தை ஏற்படுத்திய மோட்டார் சைக்கிளைச் செலுத்தி வந்தவர் மோட்டார் சைக்கிளையும் கைவிட்டு விட்டுத் தப்பித்துச் சென்றுள்ளார்.

இந்த விபத்துத் தொடர்பான விசாரணைகள் சாவகச்சேரிப் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (எ-27)

## குழாய்க் கிணறு கையளிப்பு

யாழ்ப்பாணம், செப்.19

யாழ்ப்பாணம் புனித பத்திரிசியார் கல்லூரியின் 1999ஆம் ஆண்டு மாணவர்கள் விசேட தேவையுடைய குடும்பத் தலைவரைக் கொண்ட குடும்பம் ஒன்றுக்கு குழாய்க் கிணறு அமைத்துக் கொடுத்துள்ளனர். வலி.வடக்கு, தையிட்டி தெற்கிலுள்ள குடும்பம் ஒன்றுக்கே குழாய்க்கிணறு அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது. (எ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உண்மை...

சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகம் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் இதனைத் தெரிவித்துள்ளது.

அரசாங்கம் உத்தேச ஆணைக்குழு குறித்து கடந்த கால உரிமை மீறல்கனால் பாதிக்கப்பட்டவர்கள் அவர்களது குடும்பத்தவர்கள் மனித உரிமை பாதுகாவலர்கள் ஆகியோருடன் கலந்தாலோசனைகளில் ஈடுபடாததால் அவர்கள் அவற்றை நிராகரித்துள்ளனர்.

அரசாங்கம் கடந்தகால ஆணைக்குழுக்களின் ஆதாரங்களைப் புறக்கணித்துள்ளமையும், பாதிக்கப்பட்டவர்கள், அவர்களது குடும்பத்தவர்கள், மனித உரிமைப் பாதுகாவலர்களை பாதுகாப்பு படையினரின் முன் ஆபத்துக்குள்ளாக்கியுள்ளமையும், அவர்கள் மீண்டும் ஆணைக்குழுக்களின் முன்னிலையில் தோன்றினால் மீண்டும் மன அழுத்தங்களுக்கு உள்ளாவார்கள் என்பதுமே அவர்கள் உத்தேச ஆணைக்குழுவை நிராகரிப்பதற்கான காரணங்கள்.

'நாங்கள் எங்கள் குரல்களை எழுப்பினால் அவர்கள் எங்களைக் கைது செய்வார்கள்-இலங்கையின்உத்தேசஉண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு' என்ற 39 பக்க அறிக்கையிலேயே சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகம் இதனைத் தெரிவித்துள்ளது.

அதேவேளை அரசாங்கத்தின் ஆதரவுடனான நில ஆக்கிரமிப்புகள் தமிழ், முஸ்லிம் சமூகத்தினரினது நிலத்தையும் அவர்களது வழிபாட்டு இடங்களையும் இலக்குவைக்கின்றன எனவும் சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.

இலங்கைக்கு உண்மையும் பொறுப்புக்கூறலும் மிகவும் அவசியமான விடயங்கள் - ஆழமான தேவையான விடயங்கள் எனத் தெரிவித்துள்ள சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகத்தின் ஆசியாவுக்கான பிரதி இயக்குநர் மீனாட்சி கங்குலி, "நம்பகத்தன்மைமிக்க செயற்பாடுகளுக்குப் பாதிக்கப்பட்டவர்களின் குடும்பத்தவர்களின் ஆதரவும் அந்தச் சமூகங்களுக்கு எதிரான அரசாங்கத்தின் மனித உரிமை துஷ்பிரயோகங்கள் முடிவுக்கு வருவதும் அவசியம்" எனவும் குறிப்பிட்டுள்ளார்.

'ஆணைக்குழுவின் நோக்கம் காணாமற்போனவர்களின் நிலையைக் கண்டுபிடிப்பதோ அல்லது அதற்குக் காரணமானவர்களைத் தண்டிப்பதோ இல்லை. மாறாக தண்டனையிலிருந்து விலக்களிக்கப்படுதலும், சர்வதேச சமூகத்தின் அழுத்தத்திலிருந்து தப்புவதுமே அரசாங்கத்தின் நோக்கம் என்பதை அதன் சமீபத்தைய அறிக்கைகள் வெளிப்படுத்துகின்றன' எனவும் அவர் தெரிவித்துள்ளார். (அ-ஒ.இ)

## ஜனாதிபதித்...

நகர்வுகளிலும் ஈடுபடமுடியாமற்போகும் - இவ்வாறு சுட்டிக்காட்டியுள்ளார் சுதந்திர மக்கள் சபையின் நாடாளுமன்ற உறுப்பினரும், முன்னாள் வெளிவிவகார அமைச்சருமான சட்டத்துறை பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ்.

அத்துடன், ஜனாதிபதித் தேர்தலை ஒத்திவைக்க இடமளிக்கமாட்டோம். தேசிய ரீதியில் போராட்டங்கள் நடத்தப்படும் என்பதுடன், சர்வதேசத்தையும் நாடுவோம். இலங்கையில் சர்வாதிகாரி உருவாக இடமளிக்கமாட்டோம் எனவும் பீரிஸ் குறிப்பிட்டார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போது இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:-

ஜனாதிபதித் தேர்தல் அடுத்தவருடம் நடைபெறவுள்ள நிலையில், தேர்தலை நடத்துவதற்கான சூழல் அதுவல்லவெனவும், பொருளாதாரம் உறுதியான நிலை அடையும்வரை ஜனாதிபதித் தேர்தல் ஒத்திவைக்கப்பட வேண்டும் எனவும் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்த்தன அண்மையில் கருத்து வெளியிட்டிருந்தார். அவரின் இந்தக் கருத்து படுபயங்கரமாகும். இன்னும் இரு மாதங்களில் முன்வைக்கப்படவுள்ள வரவு - செலவுத் திட்டத்தில் ஜனாதிபதித் தேர்தலுக்கு நிதி ஒதுக்கினால் உணவு, எரிபொருள் உள்ளிட்டவற்றை வாங்குவதற்குக்கூட நிதி இருக்காது என்ற கோணத்திலும் அவர் கருத்து முன்வைத்திருந்தார். இது ஜனநாயகத்துக்கு விரோதமான கருத்தாகும்.

அடுத்த ஆண்டு ஒக்ரோபர் மாதத்துக்குள் கட்டாயம் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படவேண்டும் என்பதுதான் நாட்டு சட்டம். அடுத்த ஆண்டு நவம்பரில் புதிய ஜனாதிபதி பதவியேற்கவேண்டும்.

வஜிர அபேவர்த்தன கூறுவதுபோல் ஜனாதிபதித் தேர்தல் ஒத்திவைக்கப்படுமானால் என்ன நடக்கும்? அடுத்த ஆண்டு ஒக்ரோபருக்குப் பின்னர் நாட்டில் சட்டவிரோத அரசமைப்புக்கு முரணான ஜனாதிபதியே ஆட்சியில் இருப்பார். அரசமைப்பின் பிரகாரம் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைப் பயன்படுத்த முடியாமற்போகும்.

முப்படையினருக்கு எந்தவொரு கட்டளையையும் பிறப்பிக்கமுடியாது, பலவந்தமாக ஆட்சியில் தொடரும் ஜனாதிபதியால் பிறப்பிக்கப்படும் உத்தரவை படையினரால் செயற்படுத்தமுடியாது. பொலிஸாருக்கும் கட்டளையிட முடியாது. சட்டவிரோத ஜனாதிபதியால் மக்களிடம் இருந்து வரி அறவிடமுடியாது. தூதுவர்களை நியமிக்கமுடியாது. ஆளுநர்களையும் நியமிக்கமுடியாது. இதனால் மாகாண மற்றும் உள்ளாட்சி நிர்வாகக் கட்டமைப்பும் சீர்குலையும்.

சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி, பரிஸ் கிளப் போன்றவற்றுடன் சட்டபூர்வமான நகர்வுகளை முன்னெடுக்க முடியாமற்போகும். சட்டபூர்வமற்ற ஆட்சியின்கீழ் மேற்படி அமைப்புகள் கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடாது - என்றார். (அ-ஒ.44)

## வீதிக்...

கையளிக்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நான் இராஜாங்க அமைச்சராகப் பதவியேற்கும்போது நாட்டின் பல நெடுஞ்சாலைத் திட்டங்கள் இடைநடுவில் கைவிடப்பட்டிருந்தன. ஒப்பந்தகாரர்களுக்கு பணம் வழங்க முடியாத நிலை ஏற்பட்டிருந்தது. சுமார் 180 பில்லியன் ரூபா ஒப்பந்தகாரர்களுக்குச் செலுத்த வேண்டியிருந்தது. அவ்வாறு வழங்கவேண்டியிருந்த தொகையில் தற்போது சுமார் 151 பில்லியன் ரூபா குறித்த ஒப்பந்தகாரர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. மேலும் சுமார் 29 மில்லியன் ரூபா செலுத்த வேண்டியுள்ளது. நிலுவைத் தொகை வழங்கப்படுவதால், ஒப்பந்தகாரர்கள் மீண்டும் நெடுஞ்சாலைத் திட்டப்பணிகளை ஆரம்பத்துள்ளனர்.

ஒரு இலட்சம் வீதிகள் அமைக்கும் திட்டத்தின் கீழ் 13 ஆயிரத்து 160 வீதிகள் அமைக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அவ்வாறு ஆரம்பிக்கப்பட்ட வீதிகள் 17 ஆயிரத்து 850 கிலோமீற்றர்களாகும். அதில், 5 ஆயிரத்து 201 வீதிகள் அதாவது 6 ஆயிரத்து 300 கி.மீ. வீதிகளின் பணிகள் ஏற்கனவே நிறைவு செய்யப்பட்டுள்ளன. இந்த மொத்தத் திட்டமான 17 ஆயிரத்து 850 கிலோமீற்றர் வீதிகளை அமைப்பதற்கு அரசாங்கம் 231 பில்லியன் ரூபாவை மதிப்பிட்டுள்ளது. தற்போது பூர்த்தி செய்யப்பட்ட திட்டங்களுக்காக 160 பில்லியன் ரூபா செலுத்தப்பட்டுள்ளது. இன்னும் 70 பில்லியன் ரூபா செலுத்த வேண்டியுள்ளது - என்றார். (அ-ஒ.44)

## ஊர்திக்குத்...

படம் தாங்கிய ஊர்திப் பவனியானது பொத்துவிலில் ஆரம்பிக்கப்பட்டு, திருகோணமலையில் வலம் வந்தபோது சிங்களக் காடையர்களால் தாக்கப்பட்ட நிலையில் வவுனியாவை வந்தடைந்தது. ஊர்திப் பவனி வவுனியாவில் இடம்பெற்றால் பொது அமைதிக்கு பங்கம் ஏற்படுவதுடன், இன நல்லுறவு சீர்குலையும் என வவுனியா பொலிஸில் இருவர் முறைப்பாடு செய்திருந்தனர். முறைப்பாட்டுக்கு அமைய இந்த ஊர்திப் பவனிக்கு பொலிஸார் வவுனியா நீதிமன்றில் தடை உத்தரவு கோரியிருந்தனர்.

அதனைக் கவனத்தில் எடுத்த மன்று, இறந்தவர்களை நினைவு கூரும் உரிமை அனைவருக்கும் உள்ளது என்பதை சுட்டிக்காட்டி, பொலிஸாரின் கோரிக்கையை நிராகரித்ததுடன், இன முரண்பாடுகள் மற்றும் குழப்பங்கள் ஏற்படாத வகையில் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பொலிஸாருக்கு உத்தரவு பிறப்பித்தது. (அ-ஒ.27)

## 12 மாதங்களில்...

நாட்டில் கடந்த 12 மாதங்களில் 36 பகிடிவதைச் சம்பவங்கள் தொடர்பில் முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என்று உயர்கல்வி இராஜாங்க அமைச்சர் தெரிவித்துள்ளார்.

நாடளாவிய ரீதியில் உள்ள 17 பல்கலைக்கழகங்களில் இந்தப் பகிடிவதைச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

இந்தச் சம்பவங்கள் தொடர்பாக 57 மாணவர்கள் பல்கலைக்கழகங்களில் இருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளனர். பேராதனைப் பல்கலைக்கழக முகாமைத்துவப் பீடத்தின் இரண்டாம் வருட மாணவர்கள் 11 பேர் அண்மையில் இடைநிறுத்தப்பட்டுள்ளனர். புதிய மாணவர்களை பகிடிவதைக்குட்படுத்திய குற்றச்சாட்டில் இவர்கள் இடைநிறுத்தப்பட்டனர். பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர் கல்வி நிலையங்களில் மேற்கொள்ளப்படும் துன்புறுத்தல் சம்பவங்கள் தொடர்பில் அறிவிப்பதற்காக பொலிஸாரால் அண்மையில் விசேட தொலைபேசி இலக்கம் ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டது - என்றார். (எ-இ)

## ஆஸிக்கு...

கொழும்பைச் சேர்ந்த சந்தேகநபர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

ஊர்காவற்றுறையைச் சேர்ந்த ஆசிரியர் ஒருவர், அவுஸ்திரேலியாவுக்குச் செல்வதற்காக, விளம்பரம் ஊடாக அறிமுகமான நிறுவனமொன்றின் பெயரில் 75 இலட்சம் ரூபா பணத்தை கட்டம் கட்டமாக வங்கியில் வைப்பிலிட்டுள்ளார். ஆனால், பணம் வைப்பிலிடப்பட்டு நீண்டகாலமாகியும் அவுஸ்திரேலியாவுக்கான பயண ஏற்பாடுகள் எதுவும் முன்னெடுக்கப்படாமையால் யாழ். மாவட்ட விசேட குற்ற விசாரணைப் பிரிவில் அவர் முறைப்பாடு செய்துள்ளார்.

யாழ். மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவு பொறுப்பதிகாரி குணறோயன் கீழ் இயங்கும் குழுவினர் கொழும்பைச் சேர்ந்த சந்தேகநபரை கைது செய்து நீதிமன்றத்தில் நேற்று முற்படுத்தியபோது அவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

இந்தச் சந்தேகநபரால் பாதிக்கப்பட்ட மேலும் சிலர் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடுகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-ஒ.26)

## ஒருவரைக்...

இரணைப்பாலை 5ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த 65 வயதுடைய ஒருவரே காணாமல் போயுள்ளார்.

கடந்த 10 ஆம் திகதி பி.ப. 3 மணியளவில் இரணைப்பாலையிலிருந்து குளத்தைப் பார்ப்பதற்காகச் சென்ற வேளையே குறித்த நபர் காணாமல் போயுள்ளார் என்று தெரியவருகின்றது. (அ-ஒ.19)

## 6 பேர்...

விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்ட சந்தேகநபர்களுக்கு எதிராக ஆறு குற்றச்சாட்டுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் விரைவில் அடையாள அணிவகுப்புக்கும் உட்படுத்தப்படவுள்ளனர். (அ-ஒ-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திலீபன் மீது சிங்களவர்களின் கோபம் நியாயமானதாம்!!!

## இனவாதத்தை தூண்டவே சிங்கள கிராமத்தால் பவனி என்கிறார் கம்மன்பில

புலிகளின் தாக்குதல்களால் தமது உறவுகளின் எவரேனும் ஒருவரை சிங்கள சமூகம் இழந்திருக்கும். அவ்வமைப்புமீது சிங்கள மக்களுக்கு எதிர்ப்பு, வைராக்கியம், கோபம் இருப்பது இயல்பே. இவ்வாறானதொரு பின்புலத்தில் புலிகள் அமைப்பின் உறுப்பினரை நினைவுகூர்ந்து, கிழக்கில் சிங்களக் கிராமம் ஒன்றின் ஊடாக வாகனப் பேரணியை முன்னெடுத்திருப்பது இனவாதத்தைத் தூண்டி, மக்களை குழப்பும் சூழ்ச்சி நடவடிக்கையாகும்–இவ்வாறு பிவிதுரு ஹெல உறுமயவின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:-

புலிகள் இந்நாட்டில் தடைசெய்யப்பட்ட அமைப்பாகும். புலிகள் அமைப்பின் சிவப்பு, மஞ்சள் நிறத்தில் அலங்கரிக்கப்பட்ட வாகனமொன்றில் திலீபனின் உருவப்படத்தை வைத்துக்கொண்டு கிழக்கில் இருந்து வடக்குக்குப் பேரணி செல்வதற்கு அனுமதி வழங்கியது யார்? எவரேனும் அதிகாரி அனுமதி வழங்கி இருப்பாரானால் அவர் நாட்டின் அரசமைப்பை அப்பட்டமாக மீறியவராகக் கருதப்படுவார். அதேபோல அதிகாரிகளுக்கு அரசியல்வாதி எவரேனும் இது சம்பந்தமாக ஆலோசனை வழங்கியிருந்தால் அவரும் கைது செய்யப்பட்டு, அவருக்கு எதிராக வழக்கு தொடுக்கப்படவேண்டும்.

புலிகள் அமைப்பு அப்பாவி சிங்கள மக்களை இலக்கு வைத்து 300க்கும் மேற்பட்ட பயங்கரவாதத் தாக்குதல்களை நடத்திய அமைப்பாகும். புலிகளின் தாக்குதல்களால் தமது உறவுகளின் எவரேனும் ஒருவரை சிங்களச் சமூகம் இழந்திருக்கும். எனவே, அவ்வமைப்புமீது சிங்கள மக்களுக்கு எதிர்ப்பு, வைராக்கியம், கோபம் இருப்பது இயல்பே. இவ்வாறானதொரு பின்புலத்தில்புலிகள் அமைப்பின் உறுப்பினரை நினைவு கூர்ந்து, கிழக்கில் சிங்களக் கிராமம் ஒன்றின் ஊடாக வாகனப் பேரணியை முன்னெடுத்திருப்பது இனவாதத்தைத் தூண்டி, மக்களை குழப்பும் சூழ்ச்சி நடவடிக்கையாகும்.

மக்கள் சட்டத்தைக் கையில் எடுத்து செயற்பட்டதில் தவறு இருக்கலாம். ஆனால், மக்களைக் குழப்பும் வகையில் செயற்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரனிலிருந்தே சட்டம் செயற்படத் தொடங்கவேண்டும் – என்றார். (அ–ஒ,44)

### பராமரிப்பாளர் தேவை

யாழ்ப்பாணம் நகரப் பகுதியில் மூத்த பெண் பிரஜை ஒருவரை, தங்கி நின்று பார்க்கக்கூடிய பணியாளர் தேவை. கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.

**தொடர்பு: 075 873 4301**

### காணி விற்பனைக்கு

புத்தூரில் 4 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. புத்தூர் மீசாலை பிரதான வீதியில் பருத்தித்துறை வீதியில் இருந்து 1 km. 1 பரப்பு 5 லட்சம்.

**077 8680 790**

### Management Assistant Vacancy

BDCE is an Engineering Consultancy firm Located in Jaffna looking for a Management Assistant (Female) Age Limit 20-35

Phone Contact on. 021 2216878 / 0776100140

(cs 52146) (N-1)

### முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் செல்லப்பா நடராசா

(யோகராசா)



மலர்வு 22.02.1942



உதிர்வு 30.09.2022

திதி : பஞ்சமி (19.09.2023)

அன்பே உருவான எங்கள் அப்பா!
ஆண்டுகள் ஒன்று ஆச்சுதப்பா!
இறைவன் உங்களை விரைந்தே
ஏன் அழைத்தான்

ஈடில்லா எங்கள் பொக்கிஷம் நீங்கள்தானே

உங்களுக்கு நிகர்வேறு யாரப்பா?
ஊரு உறங்கும் நேரத்தில் எம்
மனம் உறங்கவில்லை எங்களுக்குள்
நீங்கள் வாழ்வதால் நாம்வாழ்கின்றோம்!

முகம் பார்க்க ஏங்கி ஏங்கியே
நொந்து நூலாய்ப் போகின்றோம்
ஐயனே உங்கள் சிரித்த முகம்
பார்க்காமல் தவிக்கின்றோம்!!

உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்
பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்
முக்கொம்பன்,
பூநகரி.

### மரண அறிவித்தல்

பிறப்பு 02 . 06 . 1952



இறப்பு 18 . 09 . 2023

**சண்முகம்பிள்ளை கைலைநாதன்**

நாரந்தனை வடக்கு ஊர்காவற்றுறையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கைலைநாதன் நேற்று (18.09.2023) திங்கட்கிழமை காலமானார்

அன்னார் காலஞ்சென்றவர்களான சண்முகம்பிள்ளை சவுந்தரியம்மா தம்பதியரின் மகனும், காலஞ்சென்றவர்களான குருசாமி, வள்ளியம்மை தம்பதியரின் மருமகனும், கமலாம்பிகையின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற சிவபாதசுந்தரம் மற்றும் கைலாவதி மற்றும் காலஞ்சென்ற அமிர்தலிங்கம், சிங்கபாகு ஆகியோரின் சகோதரரும், புஸ்பலோஜினி, குலநாதன், கோசலாதேவி ஆகியோரின் மைத்துனரும், குகப்பிரியன், சரணியா, துளசிகா, தர்மிகன், தர்சிகா ஆகியோரின் மாமனாரும், கஜன், கஜேந்தினி, தேனிகா ஆகியோரின் சித்தப்பாவும், கம்சிகா, மலரவன் ஆகியோரின் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.09.2023) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக நாரந்தனை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.
077 822 3847
077 3242 450

(CS 26302) A-1

### ஒப்பந்த காரர்கள் தேவை

யாழ். நாவலர் வீதியில் பழைய வீட்டு கட்டடம் ஒன்றினை இடித்து துப்புரவு செய்வதற்கு ஒப்பந்த காரர்கள் தேவை.

**071 186 2611**

(cs 52149) (N-1)

### காணி விற்பனைக்கு காங்கேசன்துறையில்

K.K.S. துறைமுகத்திற்கு அண்மையில் K.K.S. றோட்டை முகப்பாக கொண்ட காணி விற்பனைக்குண்டு. (தரகர் வேண்டாம்)

**076 561 3959**

(cs 52143) (N-1)

### காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் நாவற்குழியில் **120 பரப்பு (நிலப்பரப்பு)** விற்பனைக்கு உண்டு.

* வீடு கட்டுவதற்கும், களஞ்சியசாலைகள் அமைப்பதற்கும் நல்ல சூழல்
* நாவற்குழி சந்தியிலிருந்து 1/2 கிலோ மீற்றர் தூரம்
* A-9 வீதியிலிருந்து 200 மீற்றர் தூரம்
* யாழ். பஸ் நிலையம் 3 1/2 கிலோமீற்றர் தூரம்
* இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
* நன்னீர் ஊற்று
* ஒரு பரப்பின் விலை 3 இலட்சம் (300000/=)
* தரகர் தேவையில்லை

**தொடர்பு:- 077 6234 204
076 7558 606
077 076 0389**

(CS 26250) M-1



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 19.09.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org